இந்திய அரசு

சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

# இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகச் சட்டம், 2013

(எண் 26/2013)

( 2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )

# THE RAJIV GANDHI NATIONAL AVIATION UNIVERSITY ACT, 2013

**(No. 26 of 2013)**

**(As on 31st October, 2023)**


தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகச் சட்டம், 2013

(எண் 26/2013)

# THE RAJIV GANDHI NATIONAL AVIATION UNIVERSITY ACT, 2013

(No. 26 of 2013)

# PREFACE

This edition of the Rajiv Gandhi National Aviation University Act, 2013 (No. 26 of 2013) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 12th May, 2023 on Pages from 53 to 114.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
12th May, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31அன்று இருந்தவாறுள்ள இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகச் சட்டம், 2013 (எண் 26/2013) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, மே 12 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 53 முதல் 114 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
12, மே 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE RAJIV GANDHI NATIONAL AVIATION UNIVERSITY ACT, 2013

**(No. 26 of 2013)**

**CONTENTS**


| Sections | | Pages |
|---|---|---|
| 1. | Short title and commencement. | 1 |
| 2. | Definitions. | 1 |
| 3. | Establishment of University. | 4 |
| 4. | Objects of University. | 5 |
| 5. | Powers of University. | 6 |
| 6. | Jurisdiction. | 13 |
| 7. | University open to all classes, castes and creed. | 13 |
| 8. | Fund of University. | 14 |
| 9. | The Visitor. | 14 |
| 10. | Officers of University. | 18 |
| 11. | The Chancellor. | 18 |
| 12. | The Vice-Chancellor. | 18 |
| 13. | The Deans of Schools. | 21 |
| 14. | The Registrar. | 21 |
| 15. | The Finance Officer. | 21 |
| 16. | The Controller of Examinations. | 21 |

# இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகச் சட்டம், 2013

## (எண் 26/2013)

### பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 1 |
| 3. | பல்கலைக்கழகத்தை நிறுவுதல். | 4 |
| 4. | பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள். | 5 |
| 5. | பல்கலைக்கழகத்தின் அதிகாரங்கள். | 6 |
| 6. | அதிகாரவரம்பு. | 13 |
| 7. | பல்கலைக்கழகம் அனைத்து வகுப்பு, சாதி மற்றும் சமயக் கோட்பாட்டினருக்கும் பொதுவானதாகும். | 13 |
| 8. | பல்கலைக்கழகத்தின் நிதியம். | 14 |
| 9. | மேற்பார்வையீட்டாளர். | 14 |
| 10. | பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள். | 18 |
| 11. | வேந்தர். | 18 |
| 12. | துணைவேந்தர். | 18 |
| 13. | புலமுதன்மையர். | 21 |
| 14. | பதிவாளர். | 21 |
| 15. | நிதி அலுவலர். | 21 |
| 16. | தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர். | 21 |

| | | |
|---|---|---|
| 17. | Other officers. | 21 |
| 18. | Authorities of University. | 22 |
| 19. | The Court. | 22 |
| 20. | The Executive Council. | 23 |
| 21. | The Academic Council. | 23 |
| 22. | The Board of Affiliation and Recognition. | 24 |
| 23. | The Boards of Schools. | 24 |
| 24. | The Finance Committee. | 24 |
| 25. | Other authorities of University. | 24 |
| 26. | Power to make Statutes. | 24 |
| 27. | Statutes how to be made. | 26 |
| 28. | Power to make Ordinances. | 28 |
| 29. | Regulations. | 30 |
| 30. | Annual report. | 30 |
| 31. | Annual accounts. | 31 |
| 32. | Returns and information. | 32 |
| 33. | Conditions of service of employees. | 32 |
| 34. | Tribunal of Arbitration. | 32 |
| 35. | Procedure of appeal and arbitration in disciplinary cases against students. | 33 |

| | | |
|---|---|---|
| 17. | பிற அலுவலர்கள். | 21 |
| 18. | பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள். | 22 |
| 19. | பல்கலைக்கழகத்தின் அவை. | 22 |
| 20. | செயற்குழு. | 23 |
| 21. | கல்விக் குழு. | 23 |
| 22. | இணைப்பு மற்றும் ஏற்பளிப்புக் குழுமம். | 24 |
| 23. | புலக்குழுமங்கள். | 24 |
| 24. | நிதிக் குழு. | 24 |
| 25. | பல்கலைக்கழகத்தின் பிற அதிகாரஅமைப்புகள். | 24 |
| 26. | நிலையமை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். | 24 |
| 27. | நிலையமைவிதிகள் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும். | 26 |
| 28. | நெறியமைவிதிகளைச் செய்வதற்கான அதிகாரம். | 28 |
| 29. | ஒழுங்குறுத்தும்விதிகள். | 30 |
| 30. | ஆண்டறிக்கை. | 30 |
| 31. | ஆண்டுக் கணக்குகள். | 31 |
| 32. | விவரஅறிக்கைகளும் தகவல்களும். | 32 |
| 33. | பணியாளருக்கான பணிவரைக்கட்டுகள். | 32 |
| 34. | பொதுவர் தீர்ப்பாயம். | 32 |
| 35. | மாணவர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் மேல்முறையீடு மற்றும் பொதுவர்த்தீர்ப்பிற்கான நடைமுறைகள். | 33 |

| | | |
|---|---|---|
| 36. | Right to appeal. | 33 |
| 37. | Provident and pension fund. | 34 |
| 38. | Disputes as to constitution of University and bodies. | 34 |
| 39. | Constitution of Committees. | 34 |
| 40. | Filling of casual vacancies. | 35 |
| 41. | Proceedings of University authorities or bodies not invalidated by vacancies. | 35 |
| 42. | Protection of action taken in good faith. | 35 |
| 43. | Mode of proof of University record. | 35 |
| 44. | Power to remove difficulties. | 36 |
| 45. | Statutes, Ordinances and Regulations to be published in the Official Gazette and to be laid before Parliament. | 36 |
| 46. | Transitional provisions. | 37 |
| 47. | Completion of courses of studies in Colleges or Institutions affiliated to University. | 39 |
| 48. | Role of Central Government. | 39 |

| | | |
|---|---|---|
| 36. | மேல்முறையீட்டுக்கான உரிமை. | 33 |
| 37. | வருங்கால வைப்பு மற்றும் ஓய்வூதிய நிதியம். | 34 |
| 38. | பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள் மற்றும் குழுமங்கள் ஆகியவற்றின் அமைப்பு குறித்த பூசல்கள். | 34 |
| 39. | குழுக்களின் அமைப்பாக்கம். | 34 |
| 40. | தற்காலிகக் காலியிடங்களை நிரப்புதல். | 35 |
| 41. | காலியிடங்கள் இருப்பது பல்கலைக்கழக அதிகாரஅமைப்புகளின் அல்லது குழுக்களின் நடவடிக்கைகளை செல்லாநிலையது ஆக்காது. | 35 |
| 42. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. | 35 |
| 43. | பல்கலைக்கழகத்தின் பதிவணத்தை மெய்ப்பிக்கும் முறை. | 35 |
| 44. | இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். | 36 |
| 45. | நிலையமைவிதிகளும், நெறியமைவிதிகளும் மற்றும் ஒழுங்குறுத்தும்விதிகளும், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதலும் மற்றும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படுதலும் வேண்டும். | 36 |
| 46. | மாறும் இடைக்காலத்திற்கான வகையங்கள். | 37 |
| 47. | பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் அல்லது நிறுவனங்களில் பாடவகைப் பயிலாறுகளை நிறைவு செய்தல். | 39 |
| 48. | மைய அரசின் பங்கு. | 39 |

# THE RAJIV GANDHI NATIONAL AVIATION UNIVERSITY ACT, 2013

## (No. 26 of 2013)

[18th *September*, 2013.]

An Act to establish and incorporate a national aviation University to facilitate and promote aviation studies and research to achieve excellence in areas of aviation management, policy, science and technology, aviation environment, training in governing fields of safety and security regulations on aviation and other related fields to produce quality human resources to cater to the needs of the aviation sector and to provide for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Sixty-fourth Year of the Republic of India as follows:—

Short title and commencement.

1. (1) This Act may be called the Rajiv Gandhi National Aviation University Act,2013

(2) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the official Gazette, appoint and different dates may be appointed for different provisions of this Act.

Definitions.

2. In this Act, and in all Statutes made hereunder, unless the context otherwise requires,—

(a) "Academic Council" means the Academic Council of the University;

1. 18th November, 2013, *vide* notification No. S.O. 3446 (E), dated 18th November, 2013, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

# இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகச் சட்டம், 2013

**(எண் 26/2013)**

[2013, செப்டம்பர் 18]

வானூர்திப் போக்குவரத்துத் றையின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தனித்திறமையுடன் கூடிய மனிதவளங்களை உருவாக்குவதற்கு வானூர்திப் போக்குவரத்து மேலாண்மை, கொள்கை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், வானூர்திப் போக்குவரத்து சுற்றுச்சூழல், நெறிப்படுத்தும் செயற்களங்களான வானூர்திப் போக்குவரத்தின்போது இடர்காப்பு, பாதுகாப்பு மற்றும் பிற தொடர்புடைய செயற்களங்களில் பயிற்சி ஆகிய களப்பகுதிகளில் உயர்திறன் எய்திடச் செய்யும் பொருட்டு, வானூர்திப் போக்குவரத்துக் கல்விப் பயில்வுகளுக்கும் ஆராய்ச்சிக்கும் வழிவகுத்து அவற்றை மேம்படுத்துவதற்கென ஒரு தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகத்தை நிறுவி, கூட்டுருமமாகப் பதிவு செய்வதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகச் சட்டம், 2013 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்திலும் மற்றும் இதன்படிச் செய்யப்பட்ட அனைத்து நெறியமைவிதிகளிலும் தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) "கல்விக் குழு" என்பது, பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு என்று பொருள்படும்;

---

1. 2013, நவம்பர் 18, 2013, நவம்பர் 18 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ். ஓ. 3446 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

(b) "academic staff" means such categories of staff as are designated as academic staff by the Ordinances;

(c) "Board of Schools" means the Board of Schools of the University;

(d) "Campus" means the unit established or constituted by the University for making arrangements for instruction, research, education and training;

(e) "Chancellor and Vice-Chancellor" mean, respectively, the Chancellor and Vice-Chancellor of the University;

(f) "College" means a college maintained by or admitted to the privileges of the University for imparting education and training in aviation studies or in its associated disciplines;

(g) "Court" means the Court of the University;

(h) "Dean of School" means an administrative officer in charge of a college, faculty or a Division in a University;

(i) "Department" means a Department of Studies and includes a Centre of Studies;

(j) "Director General" means the Director General of Civil Aviation;

(k) "Distance Education System" means the system of imparting education through any means of communication, such as broadcasting, telecasting, internet, correspondence courses, seminars, contact programmes, e-learning or the combination of such means;

(ஆ) "கல்விசார் பணியாளர்தொகுதி" என்பது, நெறியமைவிதிகளால் கல்விசார் பணியாளர்தொகுதி என பெயர் குறிக்கப்படுகிற அத்தகைய பணியாளர் தொகுதியின் வகையினர் என்று பொருள்படும் ;

(இ) "புலங்களின் குழுமம்" என்பது பல்கலைக்கழகத்தின் புலங்களின் குழுமம் என்று பொருள்படும் ;

(ஈ) "வளாகம்" என்பது, கற்பித்தல், ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகப் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட அலகு என்று பொருள்படும் ;

(உ) "வேந்தர் மற்றும் துணை வேந்தர்" என்பது, முறையே பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் துணை வேந்தர் என்று பொருள்படும் ;

(ஊ) "கல்லூரி" என்பது, வானூர்திப் போக்குவரத்துக் கல்விகளில் அல்லது அதன் இணைவுற்ற அறிவுத்துறைகளில் கல்வி கற்பிப்பதற்காகவும் பயிற்சியளிப்பதற்காகவும் பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் அல்லது அதன் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்ட ஒரு கல்லூரி என்று பொருள்படும்;

(எ) "அவை" என்பது, பல்கலைக்கழகத்தின் அவை என்று பொருள்படும்;

(ஏ) "புலமுதன்மையர்" என்பது, பல்கலைக்கழகம் ஒன்றில் உள்ள ஒரு கல்லூரியை, புலத்தை அல்லது ஒரு பிரிவைப் பொறுப்பில் கொண்டுள்ள ஒரு நிருவாக அலுவலர் என்று பொருள்படும் ;

(ஐ) "துறை" என்பது, கல்வி பயில்வதற்கான ஒரு துறை என்று பொருள்படும் மற்றும் ஒரு கல்வி மையத்தை உள்ளடக்கும்;

(ஒ) "தலைமை இயக்குநர்" என்பது, குடியியல் வானூர்திப் போக்குவரத்து தலைமை இயக்குநர் என்று பொருள்படும்;

(ஓ) "தொலைத்தூரக் கல்வி முறை" என்பது, ஒலிபரப்பு, ஒளிபரப்பு, இணையம், அஞ்சல் வழிக்கல்விப் பாடப்பிரிவுகள், கருத்தரங்கங்கள், நேரடி வகுப்புகள், மின்–கற்றல் போன்ற எந்தவொரு முறையிலுமான அல்லது அத்தகைய முறைகளின் ஒருங்கிணைந்த எதன் மூலமாகவுமான கல்வி புகட்டும் முறை என்று பொருள்படும்;

(l) “employee” means any person appointed by the University and includes teachers and other staff of the University;

(m) “Executive Council” means the Executive Council of the University;

(n) “Finance Committee” means the Finance Committee of the University;

(o) “Hall” means a unit of residence for the students of the University or of a College or an Institution maintained by the University;

(p) “Institution” means an institution, school, college or centre of studies maintained by or admitted to the privileges of the University for imparting education, training and research in aviation studies or in its associated disciplines;

(q) “notification” means a notification published in the Official Gazette;

(r) “off-shore Campus” means an institution, college, centres, school or campus of the University established outside the country;

(s) “principal” means the head of a college or an institution;

(t) “recognised Institution” means an institution admitted to the privileges of the University for imparting education in aviation studies or its associated disciplines;

(u) “recognised teachers” means such persons as are recognised by the University for the purpose of imparting instructions in a college or an institution admitted to the privileges of the University;

(ஔ) "பணியாளர்" என்பது, பல்கலைக்கழகத்தால் பணியமர்த்தப்பெற்ற நபர் எவரும் என்று பொருள்படும்; மற்றும் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களையும் பிற பணியாளர் தொகுதியையும் உள்ளடக்கும்;

(க) "செயற்குழு" என்பது, பல்கலைக்கழகத்தின் செயற்குழு என்று பொருள்படும்;

(ங) "நிதிக் குழு" என்பது, பல்கலைக்கழகத்தின் நிதிக்குழு என்று பொருள்படும் ;

(ச) "கூடம்" என்பது, பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் ஒரு கல்லூரி அல்லது ஒரு நிறுவனத்தின் மாணவர்களுக்கான உறைவிடத்தின் ஓர் அலகு என்று பொருள்படும் ;

(ஞ) "நிறுவனம்" என்பது, வானூர்திப் போக்குவரத்துக் கல்விகளில் அல்லது அதன் இணைவுற்ற அறிவுத்துறைகளில் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கல்வி கற்பிப்பதற்காக பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் அல்லது அதன் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்ட ஒரு நிறுவனம், புலம், கல்லூரி அல்லது கல்வி மையம் என்று பொருள்படும் ;

(ட) "அறிவிக்கை" என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிக்கை என்று பொருள்படும் ;

(ண) "கடல்கடந்த வளாகம்" என்பது, நாட்டிற்கு வெளியே நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒரு நிறுவனம், கல்லூரி, மையங்கள், புலம் அல்லது வளாகம் என்று பொருள்படும்;

(த) "முதல்வர்" என்பது, ஒரு கல்லூரியின் அல்லது ஒரு நிறுவனத்தின் தலைவர் என்று பொருள்படும்;

(ந) "ஏற்பளிக்கப்பட்ட நிறுவனம்" என்பது, வானூர்திப் போக்குவரத்துக் கல்வியில் அல்லது அதன் இணைவுற்ற அறிவுத்துறைகளில் கல்வி புகட்டுவதற்காகப் பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்ட ஒரு நிறுவனம் என்று பொருள்படும்;

(ப) "ஏற்பளிக்கப்பட்ட ஆசிரியர்கள்" என்பது, பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்ட ஒரு கல்லூரியிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ கற்பித்தலைப் புகட்டும் நோக்கத்திற்காகப் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்ட அத்தகைய நபர்கள் என்று பொருள்படும்;

(v) "school" means a School of Studies of the University;

(w) "Statutes", "Ordinances" and "Regulations" mean, respectively, the Statutes, the Ordinances and the Regulations of the University made under this Act;

(x) "teachers of the University" means Professors, Associate Professors, Assistant Professors, Readers, Senior Lecturers, Lecturers and such other persons as may be appointed or recognised for imparting instruction or conducting research in the University or in any college or institution maintained by the University or for giving guidance to students for any course of study of the University are designated as teachers by the Statutes;

(y) "University" means the National Aviation University established under this Act;

(z) "University Grants Commission" means the Commission established under section 4 of the University Grants Commission Act, 1956 3 / 1956.

Establishment of University.

3. (1) There shall be established a University by the name of "Rajiv Gandhi National Aviation University".

(2) The headquarters of the University shall be at Fursatganj in the District of Raebareli in the State of Uttar Pradesh.

(3) The University may establish or maintain campuses and centres at such other places within its jurisdiction as it may deem fit.

(ம) "புலம்" என்பது, பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகளுக்கான ஒரு புலம் என்று பொருள்படும்;

(ய) "நிலையமைவிதிகள்", "நெறியமைவிதிகள்" மற்றும் "ஒழுங்குறுத்தும்விதிகள்" என்பன, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட முறையே பல்கலைக்கழகத்தின் நிலையமைவிதிகள், நெறியமைவிதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும்விதிகள் என்று பொருள்படும்;

(ர) "பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள்" என்பது, பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் கல்லூரி அல்லது நிறுவனம் எதிலும் கல்வி கற்பிப்பதற்காக அல்லது ஆராய்ச்சி நடத்துவதற்காகப் பணியமர்த்தப்படலாகும் அல்லது ஏற்பளிக்கப்படலாகும் அல்லது பல்கலைக்கழகத்தின் பாடவகைப் பயிலாறு எதற்காகவும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்குவதற்காக நிலையமைவிதிகளால் ஆசிரியர்கள் எனப் பெயர்குறிக்கப்பட்ட பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், துணைப்பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய பிற நபர்கள் என்று பொருள்படும்;

(ல) "பல்கலைக்கழகம்" என்பது, இந்தச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;

(வ) "பல்கலைக்கழக மானியக் குழு" என்பது, பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டம், 1956, இன் 4 ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட குழு என்று பொருள்படும்.

3/1956.

பல்கலைக்–கழகத்தை நிறுவுதல்.

3. (1) "இராஜீவ் காந்தி தேசிய வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தின் தலைமையிடம் உத்திரப்–பிரதேச மாநிலம் ரெய்பரேலி மாவட்டத்தில் உள்ள புர்சட்கஞ்சில் இருத்தல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகம், அது பொருத்தமெனக் கொள்ளலாகிறவாறான அதன் அதிகாரவரம்பிற்குள் அத்தகைய பிற இடங்களில் வளாகங்களையும் மையங்களையும் நிறுவலாம் அல்லது பேணிவரலாம்.

(4) The first Chancellor, the first Vice-Chancellor, the first members of the Court, the Executive Council, the Academic Council, and all persons who may hereafter become such officers or members, so long as they continue to hold such office or membership, shall constitute the University.

(5) The University shall have perpetual succession and a common seal with power, subject to the provisions of this Act, to acquire, hold and dispose of property and to contract, and shall by that name, sue and be sued.

(6) The University shall be a teaching, research and affiliating Aviation University.

Objects of University.

4. The objects of the University shall be,—

(i) to facilitate and promote aviation studies, teaching, training, research and extension work with focus on emerging areas of studies such as aviation management, aviation regulation and policy, aviation history, aviation science and engineering, aviation law, aviation safety and security, aviation medicine, search and rescue, transportation of dangerous goods, environmental studies and other related fields, and also to achieve excellence in these and connected fields in emerging areas and such areas as may emerge in future;

(ii) to promote advanced knowledge by providing institutional and research facilities in such branches of learning as it may deem fit and to make provisions for integrated courses in management, science and other key and frontier areas of technology and allied disciplines in the educational programmes of the University;

(4) முதல் வேந்தரும், முதல் துணைவேந்தரும், அவை, செயற்குழு, கல்விக்குழு ஆகியவற்றின் முதல் உறுப்பினர்களும் மற்றும் இதன்பின்பு அத்தகைய அலுவலர்களாகவும் உறுப்பினர்களாகவும் ஆகலாகும் அனைத்து நபர்களும் அத்தகைய பதவியை அல்லது உறுப்பினர் நிலையை அவர்கள் தொடர்ந்து வகித்து வருகிறவரையில், பல்கலைக்கழகத்தை கட்டிஅமைப்பர்.

(5) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, பல்கலைக்கழகம் சொத்து ஈட்டுவதற்கும், உடைமையில் வைத்திருப்பதற்கும், அயலடைவு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தம் செய்து கொள்வதற்குமான அதிகாரத்துடன் தொடர்ந்த நிலைப்பாடும் தனியுறு இலச்சினையொன்றும் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அந்தப் பெயரால் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(6) பல்கலைக்கழகம், கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் இணைப்பேற்பு வானூர்திப் போக்குவரத்துப் பல்கலைக்கழகமாக இருத்தல் வேண்டும்.

4. பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்,– பல்கலைக்–கழகத்தின் நோக்கங்கள்.

(i) வானூர்திப் போக்குவரத்து மேலாண்மை, வானூர்திப் போக்குவரத்து ஒழுங்குமுறை மற்றும் கொள்கை, வானூர்திப் போக்குவரத்து வரலாறு, வானூர்திப் போக்குவரத்து அறிவியல் மற்றும் பொறியியல், வானூர்திப் போக்குவரத்துச் சட்டம், வானூர்திப் போக்குவரத்து இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு, வானூர்திப் போக்குவரத்து மருத்துவயியல், தேடுதல் மற்றும் காப்பாற்றுதல், அபாயகரமான சரக்குகளை ஏற்றிச்செல்லுதல், சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் பிற தொடர்புடைய செயற்களங்களில் வளர்ந்துவரும் மையமாகக் கொண்டு வானூர்திப் போக்குவரத்துப் படிப்புகள், கற்பிப்பு, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் நீட்டிப்புப்பணி ஆகியவற்றிற்கு வழிவகுத்து மேம்படுத்துதல், அத்துடன் இந்தச் செயற்களங்களில் வெளிப்படும் துறைகளிலும் தொடர்புடைய செயற்களங்களிலும் எதிர்காலத்தில் வளரலாகும் அத்தகைய துறைகளிலும் உயர்திறன் எய்துதல்;

(ii) அது பொருத்தமெனக் கொள்ளலாகும் அத்தகைய படிப்புப் பிரிவுகளில், நிறுவனம் சார்ந்த மற்றும் ஆராய்ச்சி வசதிகளை அளிப்பதன் மூலம் உரிய அறிவினை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மை, அறிவியல் மற்றும் பிற முக்கிய மற்றும் முன்னணி தொழில்நுட்பக் களப்பகுதிகளிலும் மற்றும் பல்கலைக்கழகத்தின் கல்வித்திட்டங்களில் அதைச்சார்ந்த அறிவுத்துறைகளிலும் ஒருங்கிணைந்த படிப்புகளுக்கு வகை செய்தல்;

(iii) to create an ambience for learning and scholarship in aviation technology;

(iv) to take appropriate measures for ensuring and regulating the quality of aviation education programmes in India offered by recognised institutions;

(v) to develop academic standards of an international level and undertake other measures as it may deemed fit, to facilitate the development for skilled aviation man power including the licensed category of aviation personnel;

(vi) to develop various programmers for airlines, airport, aviation authorities and staff ranging from airline management and marketing, airport management, regulations and aviation law, aviation safety and security or any other programme and train manpower in aviation field;

(vii) to take appropriate measures for promoting innovations in teaching-learning process, undertake inter-disciplinary studies and research.

Powers of University.

5. (1) The University shall have the following powers, namely:—

(i) to provide for instructions in the aviation related natural sciences, social sciences, humanities, engineering, technology and medicine or as the University may, from time to time, determine and to make provision for research and for the advancement and dissemination of knowledge;

(iii) வானூர்திப் போக்குவரத்துத் தொழில்நுட்பத்தைக் கற்பதற்கு ஏற்றதோர் ஒரு சூழலையும் படிப்பு உதவித்தொகையும் உருவாக்குதல்;

(iv) இந்தியாவில் ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும், வானூர்திப் போக்குவரத்துக் கல்விச் செயல் திட்டங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்காகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(v) உலகளவிலான நிலையில் கல்வித் தரங்களை மேம்படுத்தி உரிமம் பெற்ற வானூர்திப் போக்குவரத்துப் பணியாளர்களின் வகையினர் உள்ளடங்கலான தனித்திறன் பெற்ற வானூர்திப் போக்குவரத்து மனித வளத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பொருட்டு, அது பொருத்தமெனக் கொள்ளலாகும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(vi) வானூர்திப் பாதைகள், வானூர்தி நிலையம், வானூர்திப் போக்குவரத்து அதிகாரஅமைப்புகள் மற்றும் பணியாளர் தொகுதி, வானூர்திப் போக்குவரத்து செயற்களத்தில் வானூர்திப் பாதை மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதல், வானூர்தி நிலைய மேலாண்மை, ஒழுங்குறுத்தும்விதிகள் மற்றும் வானூர்திப் போக்குவரத்துச் சட்டம், வானூர்திப் போக்குவரத்து இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு அல்லது வானூர்திப் போக்குவரத்து செயற்களத்தில் பிற செயல்திட்டம் மற்றும் மனித வளத்திற்கு பயிற்சியளித்தல் ஆகியவற்றிற்கான பல்வேறு செயற்பணிகளை மேம்படுத்துதல்;

(vii) கற்பித்தல்–கற்றல் நடைமுறையில், புதுமைகளை உருவாக்குவதை மேம்படுத்துவதற்காக, அறிவுத்துறைகளுக்கு இடையிலான ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்தல்

ஆகியனவாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக்– கழகத்தின் அதிகாரங்கள்.

5. (1) பல்கலைக்கழகம் பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:–

(i) வானூர்திப் போக்குவரத்துத் தொடர்புடைய இயற்கை அறிவியல்கள், சமூக அறிவியல்கள், மனிதவியல், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவயியல் அல்லது பல்கலைக்கழகம் அவ்வப்போது தீர்மானிக்கலாகிறவாறான கற்பித்தலுக்கு வகை செய்தல் மற்றும் ஆராய்ச்சிக்கும், அறிவைப் பரவச்செய்திடுதலுக்கும் மேம்பாட்டிற்கும் வகையங்களைச் செய்தல்;

(ii) to recognise aviation training colleges and institutes and to make provisions for recognising of such colleges and institutions, maintenance of standards and to undertake special studies;

(iii) to establish and maintain campuses, departments, laboratories, libraries, museums, centres of research, training and specialised studies;

(iv) to establish and maintain hostel, health centres and other related facilities like auditoria, playgrounds, gymnasiums, swimming pools and training facilities;

(v) to establish linkages and collaborate with any other college or University, research institution, industry association, professional or any other organisations in India or outside India to conceptualise, design and develop specific programmes on aviation as part of education and research, training programmes and exchange programmes for students, academic staff and others;

(vi) to provide for establishment of campuses, colleges and Institutions for serving a group of recognised colleges and to provide for and maintain commoner source centres in such campuses in the form of libraries, laboratories, computer centres and the like centres of learning;

(vii) to prepare educational programmes or courses leading to award of Diploma, Degree, Post Graduate Degrees in the field of civil aviation;

(ii) வானூர்திப் போக்குவரத்துப் பயிற்சிக் கல்லூரிகளையும் நிறுவனங்களையும் ஏற்பளித்தல் மற்றும் அத்தகைய கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களை ஏற்பளிப்பதற்கும் தரநிலைகளைப் பேணிவருதற்கும் மற்றும் சிறப்பு நிலை ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கும் வகையங்களைச் செய்தல்;

(iii) வளாகங்கள், துறைகள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் சிறப்புநிலை ஆய்வுகளுக்கான மையங்களை நிறுவிப் பேணிவருதல்;

(iv) மாணவர் விடுதி, நலவாழ்வு மையங்கள் மற்றும் அரங்கங்கள், விளையாட்டுத் திடல்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள் மற்றும் பயிற்சி வசதிகள் போன்ற பிற தொடர்புடைய வசதிகளை நிறுவிப் பேணிவருதல்;

(v) மாணவர்களுக்கும் கல்விப் பணியாளர் தொகுதிக்கும் மற்றும் பிறருக்குமான கல்வி மற்றும் ஆராய்ச்சி, பயிற்சித் திட்டங்கள்; மற்றும் அவர்களுக்கான பரிமாற்ற செயல்தி டங்களின் பகுதியாக வானூர்திப் போக்குவரத்து மீது குறிப்பிட்ட செயல்திட்டங்களில் பொதுக் கருத்து ஏற்படுத்துவதற்கும், வடிவமைப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் இந்தியாவிற்குள்ளேயும் இந்தியாவிற்கு வெளியேயும் உள்ள பிற எந்தக் கல்லூரி அல்லது பல்கலைக்கழகம், ஆராய்ச்சி நிறுவனம், தொழில்துறைக் கழகம், விழைதொழில் அல்லது பிற அமைப்புகள் எவற்றுடனும் தொடர்புகளையும் ஒருங்கிணைப்பையும் நிறுவுதல்;

(vi) ஏற்பளிக்கப்பட்ட கல்லூரிகளின் ஒரு தொகுதிக்கு உதவுவதற்காக வளாகங்களையும் கல்லூரிகளையும் நிறுவனங்களையும் நிறுவுவதற்கு வகைசெய்தல்; மற்றும் அத்தகைய வளாகங்களில் நூலகங்கள், ஆய்வுக் கூடங்கள், கணிணி மையங்கள் மற்றும் அது போன்ற கற்றல் மையங்கள் வடிவத்தில் பொது ஆதார மையங்களுக்கு வகைசெய்துப் பேணிவருதல்;

(vii) குடியியல் வானூர்திப் போக்குவரத்துச் செயற்களத்தில் பட்டயம், பட்டம், முதுநிலைப் பட்டங்களை வழங்குவதற்கு வழிகாட்டும் கல்வித் திட்டங்கள் அல்லது படிப்புகளை உருவாக்குதல்;

(viii) to grant, subject to such conditions as the University may determine, degrees including doctoral degrees, diplomas or certificates other than Certificates of Competencies of licensed aviation personnel, which shall continue to be issued by Director General of Civil Aviation, Government of India till the Central Government otherwise decides, and confer degrees and other academic distinctions on the basis of examinations, evaluation or any other method of testing on persons, and to withdraw any such degrees including doctoral degrees, diplomas, certificates, or other academic distinctions for good and sufficient cause;

(ix) to confer honorary degrees or other distinctions in the manner prescribed by the Statutes;

(x) to organise and to undertake extra-mural studies, training and extension services;

(xi) to institute Directorships, Principalships, Professorships, Associate Professorships, Assistant Professorships and other teaching or academic positions, required by the University and to appoint persons to such Principalships, Professorships, Associate Professorships, Assistant Professorships or academic positions;

(xii) to provide for the terms and conditions of service of Directors, Principals and teachers and other members of the academic staff appointed by the University;

(xiii) to appoint persons working in any other University or organisation as teachers of the University for a specified period;

(viii) பல்கலைக்கழகம் தீர்மானிக்கும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, மைய அரசு பிறவாறாக முடிவு செய்கிறவரையில் இந்திய அரசின் குடியியல் வானூர்திப் போக்குவரத்துத் தலைமை இயக்குநரால் தொடர்ந்து வழங்கப்படவேண்டிய உரிமம் பெற்ற வானூர்திப் போக்குவரத்துப் பணியாளர்களுக்குரிய திறன் சான்றிதழ்கள் அல்லாத, முனைவர் பட்டங்கள் உள்ளடங்கலான பட்டங்கள், பட்டயங்கள் அல்லது சான்றிதழ்கள் ஆகியவற்றை அளித்தல்; மற்றும் தேர்வுகள், மதிப்பீடு அல்லது நபர்களைத் தேர்வாய்வு செய்யும் பிற முறை, எதன் அடிப்படையிலும் பட்டங்களும் பிற கல்விசார் சிறப்புச் சீர்மைகளும் அளித்தல்; மற்றும் சரியானதும் போதுமானதுமான காரணத்திற்காக முனைவர் பட்டங்கள் உள்ளடங்கலான அத்தகைய பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் அல்லது பிற கல்விசார் சிறப்பு சீர்மைகளை விலக்கிக் கொள்ளுதல்;

(ix) நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப் பட்ட முறையில் மதிப்புறு பட்டங்கள் அல்லது பிற சிறப்புச் சீர்மைகள் வழங்குதல்;

(x) வெளிவளாகப் படிப்புகள், பயிற்சி மற்றும் நீட்டிப்புப் பணிகளுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மேற்கொள்ளுதல்;

(xi) பல்கலைக்கழகத்தால் வேண்டுறுத்தப்படும் இயக்குநர் நிலைகள், முதல்வர் நிலைகள், பேராசிரியர் நிலைகள், இணைப் பேராசிரியர் நிலைகள், உதவிப் பேராசிரியர் நிலைகள் மற்றும் பிற கற்பிப்பு அல்லது கல்விப் பதவிகளை ஏற்படுத்துதல்; மற்றும் அத்தகைய முதல்வர் நிலைகள், பேராசிரியர் நிலைகள், இணைப் பேராசிரியர் நிலைகள், உதவிப் பேராசிரியர் நிலைகள் அல்லது கல்விப் பதவிகளுக்கு நபர்களை அமர்த்துதல்;

(xii) பல்கலைக்கழகத்தால் பதவியமர்த்தம் செய்யப்பெறும் இயக்குநர்கள், முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் மற்றும் பிற கல்விசார் பணியாளர் தொகுதியினருக்கும் பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு வகைசெய்தல்;

(xiii) பிற பல்கலைக்கழகம் அல்லது அமைப்பு எதிலும் பணிபுரியும் நபர்களை ஒரு குறித்துரைக்கப்பட்ட காலஅளவிற்குப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களாகப் பணியமர்த்துதல்;

(xiv) to recognise an institution of higher learning for such purposes as the University may determine and to withdraw such recognition;

(xv) to organise and conduct refresher courses, workshops, seminars and other programmes for teachers, evaluators and other academic staff;

(xvi) to appoint on contract or otherwise visiting Professors, Emeritus Professors, Consultants, Scholars and such other persons who may contribute to the advancement of the objects of the University;

(xvii) to create teaching, non-teaching, administrative, ministerial and other posts in the University and to make appointments thereto;

(xviii) to co-operate or collaborate or associate with any other University or authority or institution of higher learning within India or located outside the country, in such manner and for such purposes as the University may determine;

(xix) to approve appointment of persons for imparting instructions in any institution admitted to the privileges of the University and to withdraw such approval;

(xx) to inspect recognised institutions through suitable machinery established for the purpose, and to take measures to ensure that proper standards of instruction, teaching and training are maintained by them, and adequate library, laboratory, hospital, workshop and other academic facilities are provided for;

(xiv) பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய நோக்கங்களுக்கான, உயர் கல்வி பயில்வதற்கான நிறுவனம் ஒன்றிற்கு ஏற்பளித்தல்; மற்றும் அத்தகைய ஏற்பளிப்பைத் திரும்பப் பெறுதல்;

(xv) ஆசிரியர்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் பிற கல்விசார் பணியாளர் தொகுதியினருக்கான புத்தாக்கப் பயிற்சிகள், பயிற்சிப் பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் பிற செயல்முறை வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்து நடத்துதல்;

(xvi) பல்கலைக்கழக நோக்கங்களின் மேம்பாட்டிற்குப் பங்களிக்கும் வருகைதரு பேராசிரியர்கள், சிறப்புநிலை பேராசிரியர்கள், ஆலோசகர்கள், கற்றறிவாளர்கள் மற்றும் அத்தகைய பிற நபர்களை ஒப்பந்தத்தின் பேரிலோ பிறவாறாகவோ பணியமர்த்துதல்;

(xvii) பல்கலைக்கழகத்தில் ஆசிரியர், ஆசிரியரல்லாத, நிருவாக, அமைச்சுப் பணி மற்றும் பிற பணியிடங்களை உருவாக்கி அவற்றிற்குப் பணியமர்த்தங்களைச் செய்தல்;

(xviii) பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய நோக்கங்களுக்காகவும், இந்தியாவிற்குள் அமைந்துள்ள அல்லது நாட்டிற்கு வெளியே அமைந்துள்ள பிற பல்கலைக்கழகம் அல்லது அதிகாரஅமைப்பு அல்லது உயர்கல்வி பயில்வதற்கான நிறுவனம் எதனுடனும், கூடிச்செயலாற்றுதல் அல்லது உடனிணைந்து செயல்படுதல் அல்லது ஒருங்கிணைந்து செயலாற்றுதல்;

(xix) பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்டுள்ள நிறுவனம் எதிலும், கல்வி கற்பித்தலைப் புகட்டும் நபர்களின் பணியமர்த்தத்திற்கு ஒப்பேற்பளித்தல் அல்லது அத்தகைய ஒப்பேற்பளிப்பை திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்;

(xx) ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக நிறுவப்பட்ட தகுந்த இயங்கமைவு, மூலமாக அவற்றை ஆய்வு செய்தல் மற்றும் அவற்றால் கற்பித்தல், கற்பிப்பு மற்றும் பயிற்சி ஆகியவற்றில் உரிய தரநிலைகள் பேணிவரப்படுகின்றனவா என்பதையும், போதிய நூலகம், ஆய்வுக்கூடம், மருத்துவமனை, பயிற்சி பயிலரங்கம் மற்றும் பிற கல்விசார் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதையும் உறுதிசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்;

(xxi) to coordinate the work of different colleges and institutions working in the same and similar areas;

(xxii) to set up facilities like computer centre, training centre, instrumentation centre, library, simulators or other units for research and instruction as are, in the opinion of the University, necessary for the furtherance of its objects;

(xxiii) to set up curriculum development centres for different subjects;

(xxiv) to admit to its privileges colleges and institutions, not maintained by the University, and to withdraw all or any of those privileges in accordance with such conditions as may be prescribed by the Statutes;

(xxv) to recognise guide, supervise and control Halls not maintained by the University and other accommodation for students, and to withdraw any such recognition;

(xxvi) to make provision for research and advisory services and for that purpose, to enter into such arrangements with other institutions or bodies as the University may deem necessary;

(xxvii) to determine standards of admission to the University, which may include examination, evaluation or any other method of testing;

(xxviii) to institute and award fellowships, scholarships, studentships, assistantships, medals and prizes;

(xxi) ஒரே அல்லது ஒத்த பகுதிகளில் செயல்பட்டுவரும் வெவ்வேறு கல்லூரிகளின் மற்றும் நிறுவனங்களின் பணியை ஒருங்கிணைத்தல்;

(xxii) பல்கலைக்கழகம் அதன் நோக்கங்களின் நிறைவேற்றத்திற்காகத் தேவையெனத் தான் கருதுகிற கணினி மையம், பயிற்சி மையம், கருவி மையம், நூலகம், ஒப்புமைப்போலிகள் அல்லது ஆராய்ச்சி மற்றும் கற்பித்தலுக்கான பிற அலகுகள் போன்ற வசதிகளை ஏற்படுத்துதல்;

(xxiii) வெவ்வேறு பாடங்களுக்கான பாடத்திட்டத் தொகுப்புக்குரிய வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துதல்;

(xxiv) நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்–படலாகும் அத்தகைய வரைக்கட்டுகளின்படி பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத கல்லூரிகளையும் நிறுவனங்களையும் அதன் சிறப்புரிமை நலன்கருதி ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அந்தச் சிறப்புரிமைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் விலக்கிக் கொள்ளுதல்;

(xxv) பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத கூடங்களையும் மாணவர்களுக்கான பிற இடவசதியையும் ஏற்பளித்து வழிகாட்டி, மேற்பார்வையிட்டுக், கட்டாள்கை செய்தல்; மற்றும் அத்தகைய ஏற்பளிப்பு எதனையும் விலக்கிக் கொள்ளுதல்;

(xxvi) ஆராய்ச்சி மற்றும் அறிவுரைப் பணிகளுக்கான ஏற்பாடு செய்தல்; மற்றும் அந்த நோக்கத்திற்காகப் பல்கலைக்கழகம் பிற நிறுவனங்கள் அல்லது குழுமங்களுடன் தான் தேவையெனக் கொள்ளலாகும் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுதல்;

(xxvii) பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கான தரநிலைகளைத் தீர்மானித்தல்; அது தேர்வு, மதிப்பீடு அல்லது பிற தேர்வாய்வு முறை எதனையும் உள்ளடக்கலாம்;

(xxviii) புத்தாய்வு மாணவர் நிலைகள், படிப்புதவித் தொகைகள், மாணவர் உதவித்தொகைகள், துணைமையுதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை நிறுவி வழங்குதல்;

(xxix) to demand and receive payment of fees and other charges;

(xxx) to supervise the residences of the students of the University and to make arrangements for promoting their health and general welfare;

(xxxi) to make such special arrangements in respect of women students as the University may consider desirable;

(xxxii) to regulate the conduct of the students of the University;

(xxxiii) to control and regulate admission of students for various courses of study in Departments, recognised institutions, schools and centres of studies;

(xxxiv) to regulate the work and conduct of the employees of the University;

(xxxv) to regulate and enforce discipline among the employees and students of the University and to take such disciplinary measures in this regard as may be deemed necessary;

(xxxvi) to make arrangements for promoting the health and general welfare of the employees of the University;

(xxxvii) to receive benefactions, donations and gifts from persons and to name after them such chairs, institutions, buildings and the like, the University may determine, whose gift or donation to the University is worth such amount as the University may decide;

(xxxviii) to acquire, hold, manage and dispose of any property, movable or immovable, including trust and endowment properties for the purposes of the University;

(xxix) கட்டணங்கள் மற்றும் பிற கட்டணத் தொகைகளின் செலுத்தத்தைக் கோரிப்பெறுதல்;

(xxx) பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் உறைவிடங்களை மேற்பார்வையிட்டு அவர்களுடைய உடல்நலத்தையும் பொது நலத்தையும் மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(xxxi) மாணவிகளைப் பொறுத்து பல்கலைக்கழகம் விரும்பத்தக்கது எனக் கருதலாகிறவாறு அத்தகைய சிறப்பு ஏற்பாடுகளைச் செய்தல்;

(xxxii) பல்கலைக்கழக மாணவர்களின் நடத்தையை ஒழுங்குறுத்தம் செய்தல்;

(xxxiii) துறைகள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்கள், பயிற்சிப் பள்ளிகள் மற்றும் கல்வி மையங்களில் பல்வேறு பாடவகைப் பயிலாறுகளுக்கான மாணவர்கள் சேர்க்கையைக் கட்டுப்படுத்தி ஒழுங்குறுத்துதல்;

(xxxiv) பல்கலைக்கழகப் பணியாளர்களின் பணி மற்றும் நடத்தையை ஒழுங்குறுத்துதல்;

(xxxv) பல்கலைக்கழகப் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே ஒழுங்குக்கட்டுப்பாட்டை ஒழுங்குறுத்தி செயல்படுத்துதல் மற்றும் தேவையெனக் கொள்ளப்படலாகும் இது தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்தல்;

(xxxvi) பல்கலைக்கழகப் பணியாளர்களின் உடல்நலத்தையும் பொது நலத்தையும் மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(xxxvii) நிதியுதவிகள், நன்கொடைகள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை நபர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, எவருடைய பரிசு அல்லது நன்கொடை பல்கலைக்கழகத்திற்குப் பெருமதிப்புள்ள ஒரு தொகை எனப் பல்கலைக்கழகம் முடிபு செய்யலாகுமோ அவருடைய பெயரைப் பல்கலைக்கழகம் தீர்மானிக்கும் அத்தகைய துறை இருக்கைகள், நிறுவனங்கள், கட்டிடங்கள் மற்றும் அதுபோன்றவற்றிற்குச் சூட்டுதல்;

(xxxviii) பல்கலைக்கழகத்தின் நோக்கங் களுக்காகப் பொறுப்புக்கட்டளை மற்றும் அறக்கட்டளைச் சொத்துக்கள் உள்ளடங்கலாக, அசையும் அல்லது அசையாச் சொத்து எதனையும் ஈட்டுதல், உடைமையில் வைத்திருத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் அயலடைவு செய்தல்;

(xxxix) to borrow, with the approval of the Central Government, on the security of the property of the University, money for the purposes of the University;

(xl) to assess needs of the students in terms of subjects, fields of specialisation, levels of education and training of technical manpower, both on short and long term basis, and to initiate necessary programmers to meet these needs;

(xli) to initiate measures to enlist the co-operation of the industry to provide complementary facilities;

(xlii) to provide for instruction through "distance learning" and "open approach" and for mobility of students from the non-formal open learning stream to the formal stream and vice versa;

(xliii) to establish such campuses, special centres, specialised laboratories or other units for research and instruction as are, in the opinion of the University, necessary for the furtherance of its objective;

(xliv) to confer autonomous status on a college or an institution or a Department, as the case may be, in accordance with the Statutes;

(xlv) to arrange for the training to upgrade aviation standard of the employees of the industry and institutes and to levy fees for such training as prescribed by the Statutes;

(xxxix) பல்கலைக்கழகத்தின் நோக்கங்–களுக்காக மைய அரசின் ஒப்பேற்புடன் பல்கலைக்கழகச் சொத்தின் பிணையத்தின் பேரில் பணத்தைக் கடன் பெறுதல்;

(xl) குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையிலும், பாடங்கள், தனித்துறைப் பயிற்சி, கல்வியின் நிலைகள் மற்றும் தொழில்நுட்ப மனித ஆற்றல்களின் பயிற்சி ஆகிய கோணங்களிலும் மாணவர்களின் தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் இந்தத் தேவைகளை நிறைவேற்றத் தேவையான செயல்முறை வகுப்புகளைத் தொடங்குதல்;

(xli) முழுமையுறச் செய்யும் வசதிகளை வகை செய்வதற்கு விசைத்தொழில் கூட்டுறவைப் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கைகளைத் தொடங்குதல்;

(xlii) "தொலைத்தூரக் கற்றல்" மற்றும் "திறந்தநிலை அணுகுமுறை" மூலமாகக் கற்பித்தல் மற்றும் முறைசாராத் திறந்தநிலைக் கற்றல் வெளியிலிருந்து முறைசார்ந்த கற்றல் முறைக்கும் மற்றும் ஒன்றுக்கொன்று மாறாகவும் மாணவர்களை மாற்றிக்கொள்வதற்காகவும் ஏற்பாடு செய்தல்;

(xliii) பல்கலைக்கழகம் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தேவையெனக் கருதும் ஆராய்ச்சி மற்றும் கற்பித்தலுக்கான அத்தகைய வளாகங்கள், சிறப்பு மையங்கள், சிறப்பு நிலை ஆய்வுக் கூடங்கள் அல்லது பிற அலகுகளை ஏற்படுத்துதல்;

(xliv) நிலையமைவிதிகளுக்கு இணங்க, நேர்வுக்கேற்ப ஒரு கல்லூரிக்கு அல்லது ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு துறைக்குத் தன்னாட்சித் தகுநிலை வழங்குதல்;

(xlv) விசைத்தொழில் மற்றும் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு நிலையுயர்த்தப்பட்ட வானூர்திப் போக்குவரத்துத் தரநிலைக்குப் பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் அத்தகைய பயிற்சிக்காக நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு கட்டணங்கள் விதித்தல்;

(xlvi) to establish off-shore Campus at any place outside the Country as and when it is considered necessary for advancing the aims and objects of the University; and

(xlvii) to do all such other acts and things as may be necessary, incidental or conducive to the attainment of all or any of its objects.

(2) In exercising its powers referred to in sub-section (1), it shall be the endeavour of the University to maintain an international character and highest possible standards of teaching and research.

Jurisdiction.

6. The jurisdiction of the University shall extend to the whole of India.

University open to all classes, castes and creed.

7. The University shall be open to persons of either sex and of whatever caste, creed, race or class, and it shall not be lawful for the University to adopt or impose on any person any test whatsoever of religious belief or profession in order to entitle him to be appointed as a teacher of the University or to hold any other office therein or be admitted as a student in the University or to graduate thereat or to enjoy or exercise any privilege thereof:

Provided that nothing in this section shall be deemed to prevent the University from making special provisions for the employment or promotion of educational interests of women, physically challenged or of persons belonging to the weaker sections of the society and, in particular, of the Scheduled Castes and the Scheduled Tribes:

(xlvi) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் மேம்படுத்துவதற்காகத் தேவையெனக் கருதும்போது நாட்டிற்கு வெளியே எந்த ஓர் இடத்திலும் கடல்கடந்த வளாகத்தை நிறுவுதல்; மற்றும்

(xlvii) அதன் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் எய்துவதற்குத் தேவைப்படலாகிற, சார்வுறுவான அல்லது உகந்ததான அத்தகைய பிற செயல்கள், செயல்பாடுகள் அனைத்தையும் செய்தல்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அதன் அதிகாரங்களைச் செலுத்துகையில், கற்பிப்பு மற்றும் ஆராய்ச்சியின் உலகளாவிய பாங்குகளையும் இயன்ற அளவில் மிக உயர்ந்த தரநிலைகளையும் பேணிவருவதற்குப் பல்கலைக்கழகம் முனைந்து முயலுதல் வேண்டும்.

அதிகாரவரம்பு.

6. பல்கலைக்கழகத்தின் அதிகாரவரம்பு இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

பல்கலைக்கழகம் அனைத்து வகுப்பு, சாதி மற்றும் சமயக் கோட்பாட்டின–ருக்கும் பொதுவானதாகும்.

7. பல்கலைக்கழகம், எந்த ஒரு பாலினத்தவரும் மற்றும் சாதி, சமயக்கோட்பாடு, இனம் அல்லது வகுப்பு எதுவாயினும் அதனைச் சார்ந்த நபர்களுக்கும் பொதுவானதாகும்; மற்றும் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆசிரியராகப் பணியமர்த்தப்பெறுவதற்கோ அல்லது அதில் பிற பதவி எதுவும் வகிப்பதற்கோ அல்லது பல்கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்க்கப்படுவதற்கோ அல்லது அதில் பட்டம் பெறுவதற்கோ அல்லது சிறப்புரிமை எதனையும் துய்ப்பதற்கோ அல்லது செலுத்துவதற்கோ எந்த ஒரு நபரையும் உரிமையுடையவராக்கும் பொருட்டு சமய நம்பிக்கை அல்லது ஓம்புகை எதுவாயினும் அது சார்ந்த தேர்வு எதனையும் எந்த ஒரு நபர் மீதும் மேற்கொள்ளுதலோ அல்லது வலிந்து ஏற்கச் செய்தலோ பல்கலைக்கழகத்திற்குச் சட்ட முறையானது ஆகாது:

**வரம்புரையாக:** இந்தப் பிரிவிலுள்ள எதுவும், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் அல்லது சமுதாயத்தில் நலிவுற்றப் பிரிவினைச் சார்ந்த நபர்கள் மற்றும் குறிப்பாக பட்டியலில்கண்ட சாதி மற்றும் பட்டியலில்கண்ட பழங்குடியைச் சார்ந்த நபர்களின் வேலைவாய்ப்பு அல்லது கல்வி நல மேம்பாட்டிற்கான சிறப்பு வகையங்களைச் செய்வதிலிருந்து பல்கலைக்கழகத்தைத் தடையூறு செய்வதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

Provided further that no such special provision shall be made on the ground of domicile.

Fund of University.

8. (1) There shall be a University Fund which shall include—

(a) any contribution or grant made by the Central Government or an instrumentality of the Central Government;

(b) any contribution or grant made by the State Governments;

(c) any contribution from aviation companies and aviation industry both Indian and international;

(d) any bequests, donations, endowments or other grants made by any private individual or institution;

(e) income received by the University from fees and charges; and

(f) amounts received from any other source.

(2) The said fund shall be utilised for such purposes of the University and in such manner as may be prescribed by the Statutes and the Ordinances.

The Visitor.

9. (1) The President of India shall be the Visitor of the University:

**மேலும் வரம்புரையாக:** அத்தகைய சிறப்பு வகையம் எதுவும் நிலை, வாழ்விடம் காரணமாகச் செய்யப்படுதல் ஆகாது.

8. (1) பல்கலைக்கழக நிதியம் ஒன்று இருந்து வருதல் வேண்டும், அது– பல்கலைக்கழகத்–தின் நிதியம்.

(அ) மைய அரசால் அல்லது மைய அரசின் நிமித்தம் செயல்படும் ஒருவரால் செய்யப்படும் பங்களிப்பு அல்லது மானியம் எதனையும்;

(ஆ) மாநில அரசால் செய்யப்படும் பங்களிப்பு அல்லது மானியம் எதனையும்;

(இ) இந்தியா மற்றும் பன்னாட்டிடை ஆகிய இரு வானூர்திப் போக்குவரத்து நிறுமங்கள் மற்றும் வானூர்திப் போக்குவரத்து விசைத்தொழில் ஆகிய இரண்டிலிருந்தும் பெறப்படும் பங்களிப்பு எதனையும் ;

(ஈ) தனிநபர் அல்லது தனியார் நிறுவனம் எதனாலும் வழங்கப்படும் விருப்புறுதி வழிக்கொடைகள், நன்கொடைகள், அறக்கட்டளைகள் அல்லது பிற மானியங்கள் எதனையும்;

(உ) கட்டணங்கள் மற்றும் கட்டணத் தொகைகளிலிருந்து பல்கலைக்கழகத்தால் பெறப்படும் வருமானத்தையும் ; மற்றும்

(ஊ) பிற ஆதாரம் எதிலிருந்தும் பெறப்படும் தொகைகளையும்

உள்ளடக்குவதாக இருத்தல் வேண்டும்.

(2) மேற்சொன்ன நிதியம், நிலையமைவிதிகளாலும் நெறியமைவிதிகளாலும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான பல்கலைக்கழகத்தின் அத்தகைய நோக்கங்களுக்காக அத்தகைய முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

9. (1) இந்தியக் குடியரசுத்தலைவர், பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையீட்டாளராக இருப்பார்: மேற்பார்வையீட்–டாளர்.

Provided that the President may, by order, nominate any person to be the Visitor and such person so nominated shall hold office for such term, not exceeding five years as may be specified in the order and the person so nominated shall exercise the powers and discharge duties of the Visitor.

(2) The Visitor may, from time to time, appoint one or more persons to review the work and progress of the University, including colleges and institutions managed by it, and to submit a report thereon; and upon receipt of that report, the Visitor may, after obtaining the views of the Executive Council thereon through the Vice-Chancellor, take such action and issue such directions, as he considers necessary, in respect of any of the matters dealt within the report and the University shall be bound to comply with such directions.

(3) The Visitor shall have the right to cause an inspection to be made by such person or persons as he may direct, of the University, its buildings, libraries, laboratories and equipment, and of any college, institution or campus maintained by the University and also of the examinations, instruction and other work conducted or done by the University and to cause an inquiry to be made in like manner in respect of any matter connected with the administration or finances of the University, colleges or institutions.

(4) The Visitor shall, in every matter referred to in sub-section (3), give notice to the University of his intention to cause an inspection or inquiry to be made—

**வரம்புரையாக:** குடியரசுத்தலைவர் ஆணையின் வழி எந்த ஒரு நபரையும் மேற்பார்வையீட்டாளராக இருப்பதற்கு நியமிக்கலாம்; மற்றும் அவ்வாறு நியமிக்கப்பெறும் அத்தகைய நபர் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகிறவாறு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத அத்தகைய காலஅளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அவ்வாறு நியமிக்கப்பெற்ற நபர் மேற்பார்வையீட்டாளரின் அதிகாரங்களைச் செலுத்துதலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(2) மேற்பார்வையீட்டாளர், அவ்வப்போது பல்கலைக்கழகத்தால் மேலாண்மை செய்யப்பட்டுவரும், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக, பல்கலைக்கழகத்தின் பணியையும், முன்னேற்றத்தையும் மறுஆய்வு செய்து அதன்மீது அறிக்கை ஒன்றை முன்வைப்பதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை அமர்த்தலாம்; மற்றும் அந்த அறிக்கையைப் பெறுவதன் பேரில் மேற்பார்வையீட்டாளர், அதன்மீது துணை வேந்தர் மூலமாக செயற்குழுவின் கருத்துக்களைப் பெற்ற பின்பு, அந்த அறிக்கையில் கையாளப்பட்ட பொருட்பாடுகள் எவற்றையும் பொறுத்து, அவர் தேவையெனக் கருதுகிற அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்; மேலும் பல்கலைக்கழகம் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்கக் கட்டுப்பட்டதாக இருக்கும்.

(3) மேற்பார்வையீட்டாளர், அவர் பணிக்கலாகும் அத்தகைய நபரால் அல்லது நபர்களால், பல்கலைக்கழகத்தையும், அதன் கட்டிடங்கள், நூலகங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் சாதனம் ஆகியவற்றையும், பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் கல்லூரி, நிறுவனம் அல்லது வளாகம் எதனையும் அத்துடன் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் அல்லது செய்யப்படும் தேர்வுகள், கற்பித்தல்கள் மற்றும் பிற பணியையும் ஆய்வு செய்விக்கச் செய்வதற்கும் பல்கலைக்கழகம், கல்லூரிகள் அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாகம் அல்லது நிதிகள் தொடர்புடைய பொருட்பாடு எதனையும் பொறுத்து, அதே முறையில் விசாரணையொன்று செய்விக்கச் செய்வதற்கும் உரிமை கொண்டிருப்பார்.

(4) மேற்பார்வையீட்டாளர், (3) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட ஒவ்வொரு பொருட்பாட்டிலும் ஓர் ஆய்வோ அல்லது விசாரணையோ செய்யப்படச் செய்வதற்கான தன் உட்கருத்து குறித்துப் பல்கலைக்கழகத்திற்கு–

(a) to the University, if such inspection or inquiry is to be made in respect of the University or any college or institution maintained by it, or

(b) to the management of the college or institution, if the inspection or inquiry is to be made in respect of the college or institution admitted to the privileges of the University, and the University or he management, as the case may be, shall have the right to make such representations to the Visitor, as it may consider necessary.

(5) After considering the representations, if any, made by the University or the management, as the case may be, the Visitor may cause to be made such inspection or inquiry as is referred to in sub-section (*3*).

(6) Where any inspection or inquiry has been caused to be made by the Visitor, the University shall be entitled to appoint a representative, who shall have the right to be present in person and be heard at such inspection or inquiry.

(7) The Visitor may, if the inspection or inquiry is made in respect of the University, college or institution maintained by it, address the Vice-Chancellor with reference to the result of such inspection or inquiry together with such views and advice with regard to the action to be taken thereon, as the Visitor may be pleased to offer, and on receipt of address made by the Visitor, the Vice-Chancellor shall communicate forthwith to the Executive Council the results of the inspection or inquiry, and the views of the Visitor and the advice tendered by him upon the action to be taken thereon.

(அ) அத்தகைய ஆய்வோ அல்லது விசாரணையோ பல்கலைக்கழகம் அல்லது அதனால் பேணிவரப்படும் கல்லூரி அல்லது நிறுவனம் எதனையும் பொறுத்துச் செய்யப்படவேண்டுமாயின் பல்கலைக்கழகத்திற்கு, அல்லது

(ஆ) அத்தகைய ஆய்வோ விசாரணையோ பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்டுள்ள கல்லூரி அல்லது நிறுவனம் பொறுத்துச் செய்யப்பட வேண்டுமாயின், கல்லூரியின் அல்லது நிறுவனத்தின் நிருவாகத்திற்கு அறிவிப்புக் கொடுத்தல் வேண்டும்; மற்றும் நேர்வுக்கேற்ப, பல்கலைக்கழகமோ அல்லது நிருவாகமோ, அது தேவையெனக் கருதுகிற அத்தகைய உரையீடுகளை மேற்பார்வையீட்டாளரிடம் செய்து கொள்வதற்கு உரிமையுடையது ஆகும்.

(5) நேர்வுக்கேற்ப, பல்கலைக்கழகத்தாலோ அல்லது நிருவாகத்தாலோ உரையீடுகள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின், அவற்றை ஓர்வு செய்த பின்பு, மேற்பார்வையீட்டாளர், (3)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டவாறு அத்தகைய ஆய்வோ அல்லது விசாரணையோ செய்யப்படச் செய்யலாம்.

(6) மேற்பார்வையீட்டாளரால் ஆய்வு அல்லது விசாரணை எதுவும் செய்யப்படச் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, பல்கலைக்கழகம் சார்பாற்றுநர் ஒருவரை அமர்த்துவதற்கு உரிமையுடையதாகும்; அந்த ஒருவர் அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையில் நேர்முகமாக முன்னிலையாவதற்கும் விசாரிக்கப்படுவதற்கும் உரிமையுடையவர் ஆவார்.

(7) ஆய்வோ அல்லது விசாரணையோ பல்கலைக்கழகம் அல்லது அதனால் பேணிவரப்படும் கல்லூரி அல்லது நிறுவனம் பொறுத்துச் செய்யப்படுமாயின் அத்தகைய ஆய்வின் அல்லது விசாரணையின் முடிவு குறித்து, அதன்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பொறுத்து மேற்பார்வையீட்டாளர் வழங்க விரும்புகிற அத்தகைய கருத்துக்களுடனும் ஆலோசனைகளுடனும் சேர்த்து துணை வேந்தருக்குக் கருத்துரை அனுப்பி வைக்கலாம்; மற்றும் மேற்பார்வையீட்டாளரால் அனுப்பி வைக்கப்பட்ட கருத்துரையைப் பெறுவதன் பேரில் துணை வேந்தர், உடனடியாக ஆய்வின் அல்லது விசாரணையின் முடிவுகளையும், மேற்பார்வையீட்டாளரின் கருத்துக்களையும் அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீது அவரால் வழங்கப்பட்ட ஆலோசனையையும் செயற்குழுவிற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(8) The Visitor may, if the inspection or inquiry is made in respect of any college or institution admitted to the privileges of the University, address the management concerned through the Vice-Chancellor with reference to the result of such inspection or inquiry, his views thereon and such advice as he may be pleased to offer upon the action to be taken thereon.

(9) The Executive Council or the management, as the case may be, shall communicate, through the Vice-Chancellor to the Visitor such action, if any, as it proposes to take or has been taken upon the result of such inspection or inquiry.

(10) Where, the Executive Council or the management does not, within a reasonable time, take action to the satisfaction of the Visitor, the Visitor may, after considering any explanation furnished or representation made by the Executive Council or the management, issue such directions as he may think fit and the Executive Council shall comply with such directions.

(11) Without prejudice to the foregoing provisions of this section, the Visitor may, by order in writing, annul any proceeding of the University which is not in conformity with the Act, the Statutes or the Ordinances:

Provided that before making any such order, the Visitor shall call upon the Registrar to show cause why such an order should not be made, and, if any cause is shown within a reasonable time, he shall consider the same.

(8) ஆய்வோ அல்லது விசாரணையோ பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்ட கல்லூரி அல்லது நிறுவனம் எதனையும் பொறுத்து செய்யப்படுமாயின், மேற்பார்வையீட்டாளர், அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவு குறித்தும், அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீது அவர் வழங்க விரும்புகிற அத்தகைய ஆலோசனை குறித்தும் துணை வேந்தர் மூலமாகத் தொடர்புடைய நிருவாகத்திற்குத் தெரிவிக்கலாம்.

(9) நேர்வுக்கேற்ப, செயற்குழுவோ அல்லது நிருவாகமோ அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவின் மீது அது மேற்கொள்ளக் கருதுகிற அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கும் அத்தகைய நடவடிக்கை எதனையும் துணை வேந்தர் மூலமாக மேற்பார்வையீட்டாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(10) செயற்குழுவோ அல்லது நிருவாகமோ மேற்பார்வையீட்டாளர் மன நிறைவடையும் வகையில் தகுமான ஒரு காலத்திற்குள், நடவடிக்கை மேற்கொள்ளாதவிடத்து, மேற்பார்வையீட்டாளர் செயற் குழுவினாலோ நிருவாகத்தினாலோ அளிக்கப்பட்ட விளக்கம் அல்லது உரையீடு எதனையும் ஓர்வு செய்த பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்; மற்றும் செயற்குழு அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(11) இந்தச் சட்டத்தின் மேலேகண்ட வகையங்களுக்குக் குந்தகமின்றி, மேற்பார்வையீட்டாளர், எழுத்து வடிவிலான ஆணையின் வழி, இந்தச் சட்டத்தின், நிலையமைவிதிகளுக்கு அல்லது நெறியமைவிதிகளுக்கு இணங்கியவாறு இல்லாத பல்கலைக்கழக நடவடிக்கை எதனையும் அழித்தறவு செய்யலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதனையும் பிறப்பிப்பதற்கு முன்பு, மேற்பார்வையீட்டாளர், அத்தகைய ஆணை ஏன் பிறப்பிக்கப்படுதல் ஆகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு பதிவாளரைக் கோரலாம்; மற்றும் ஒரு தகுமான காலத்திற்குள் காரணம் எதுவும் காட்டப்படுமாயின் அவர், அதனை ஓர்விற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(12) Notwithstanding anything contained in the foregoing provisions, the Visitor may give any direction to the University after giving an opportunity to the University as the circumstances warrant.

(13) The Visitor shall have such other powers as may be prescribed by the Statutes.

Officers of University.

10. The following shall be the officers of the University:—

(1) the Chancellor;

(2) the Vice-Chancellor;

(3) the Deans of Schools;

(4) the Registrar;

(5) the Finance Officer;

(6) the Controller of Examinations; and

(7) such other officers as may be declared by the Statutes to be officers of the University.

The Chancellor.

11. (1) The Chancellor shall be appointed by the Visitor in such manner as may be prescribed by the Statutes.

(2) The Chancellor shall, by virtue of his office, be the head of the University.

(3) The Chancellor shall, if present, preside at the Convocations of the University held for conferring degrees.

The Vice-Chancellor.

12. (1) The Vice-Chancellor shall be appointed by the Visitor in such manner for such term and on such emoluments and other conditions of service as may be prescribed by the Statutes.

(12) மேலேகண்ட வகையங்களில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மேற்பார்வையீட்டாளர், சூழ்நிலைகள் தேவைக்கேற்ப வாய்ப்பு ஒன்றைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்த பின்பு பல்கலைக்கழகத்திற்குப் பணிப்புரை எதுவும் கொடுக்கலாம்.

(13) மேற்பார்வையீட்டாளர், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10. பின்வருவோர், பல்கலைக்கழகத்தின் அலுவலர்களாக இருப்பர்:– பல்கலைக்கழகத்–தின் அலுவலர்கள்.

(1) வேந்தர்;

(2) துணை வேந்தர்;

(3) புலமுதன்மையர்கள்;

(4) பதிவாளர்;

(5) நிதி அலுவலர்;

(6) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்; மற்றும்

(7) பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் என நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் அத்தகைய ற அலுவலர்கள்.

11. (1) வேந்தர், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப் படலாகும் அத்தகைய முறையில் மேற்பார்வையீட்டாளரால் அமர்த்தம் செய்யப்பெறுவார். வேந்தர்.

(2) வேந்தர், தன் பதவியின்வழிப் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பார்.

(3) வேந்தர், வருகை புரிந்திருப்பின், பட்டங்கள் அளிப்பதற்காக நடத்தப்படும் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாக்களில் தலைமை வகிப்பார்.

12. (1) துணை வேந்தர் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அத்தகைய காலஅளவிற்கு மற்றும் அத்தகைய பணியூதியங்கள் மற்றும் பிற பணிவரைக்கட்டுகளின் பேரில் மேற்பார்வையீட்டாளரால் அமர்த்தப்பெறுவார். துணை வேந்தர்.

(2) The Vice-Chancellor shall be the principal executive and academic officer of the University and shall exercise general supervision and control over the affairs of the University and give effect to the decisions of all the authorities of the University.

(3) The Vice-Chancellor may, if he is of opinion that immediate action is necessary on any matter, exercise any power conferred on any authority of the University by or under this Act and shall report to such authority the action taken by him on such matter:

Provided that if the authority concerned is of opinion that such action ought not to have been taken, it may refer the matter to the Visitor whose decision thereon shall be final:

Provided further that any person in the service of the University who is aggrieved by the action taken by the Vice-Chancellor under this sub-section shall have the right to appeal against such action to the Executive Council within ninety days from the date on which decision on such action is communicated to him and thereupon the Executive Council may confirm, modify or reverse the action taken by the Vice-Chancellor.

(2) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் முதன்மை நிருவாகியாகவும் கல்விசார் அலுவலராகவும் இருப்பார்; மற்றும் பல்கலைக்கழகத்தின் அலுவற்பாடுகள் மீது பொதுவான கண்காணிப்பும் கட்டாள்கையும் செலுத்திவருவதோடு, பல்கலைக்கழகத்தின் அனைத்து அதிகாரஅமைப்புகளின் முடிபுகளுக்கும் செல்திறம் கொடுப்பார்.

(3) துணை வேந்தர், எந்த ஒரு பொருட்பாட்டின் மீதும் உடனடி நடவடிக்கைத் தேவையென அவர் கருதுவாராயின், இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ பல்கலைக்கழகத்தின் எந்த ஓர் அதிகாரஅமைப்பிற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் எதனையும் செலுத்தலாம்; மற்றும் அத்தகைய பொருட்பாட்டின் மீது அவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை அத்தகைய அதிகாரஅமைப்பிற்குத் தெரிவித்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்திருத்தல் ஆகாது என்று தொடர்புடைய அதிகாரஅமைப்புக் கருதுமாயின், அது அந்தப் பொருட்பாட்டினை மேற்பார்வையீட்டாளருக்குக் குறித்தனுப்பலாம், அதன்மீது அவருடைய முடிபே அறுதியானதாகும்.

**மேலும் வரம்புரையாக**: இந்த உட்பிரிவின்படி துணை வேந்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் குறையுற்றவராக இருக்கும் பல்கலைக்கழகத்தின் பணியில் உள்ள நபர் எவரும், அத்தகைய நடவடிக்கையின் மீதான முடிபு எந்தத் தேதியன்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அத்தகைய நடவடிக்கைக்கு எதிராக செயற்குழுவிற்கு மேல்முறையீடு செய்து கொள்வதற்கு உரிமை கொண்டிருப்பார்; மற்றும் அதன்பேரில் செயற்குழு, துணை வேந்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை உறுதி செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(4) The Vice-Chancellor, if he is of the opinion that any decision of any authority of the University is beyond the powers of the authority conferred by the provisions of this Act, the Statutes or the Ordinances or that any decision taken is not in the interest of the University, may ask the authority concerned to review its decision within sixty days of such decision and if the authority refuses to review the decision either in whole or in part or no decision is taken by it within the said period of sixty days, the matter shall be referred to the Visitor whose decision thereon shall be final:

Provided that the decision of the authority concerned shall remain suspended during the period of such decision by the authority or the Visitor, as the case may be, under this sub-section.

(5) The Vice-Chancellor may cause an inspection to be made by such person or persons as he may direct, of a College or an Institution not being maintained by the University, its buildings, libraries, laboratories and equipment, and also examinations, teaching and other work conducted or done by the college or the institution and cause an inquiry, to be made in the like manner, in respect of any matter connected with the quality of education and other academic activities of the colleges or the institutions.

(6) The Vice-Chancellor shall exercise such other powers and perform such other duties as may be prescribed by the Statutes or the Ordinances.

(4) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு எதனின் முடிபு எதுவும் இந்தச் சட்டத்தின் வகையங்களாலோ, நிலையமைவிதிகள் அல்லது நெறியமைவிதிகளாலோ அளிக்கப்பட்ட அந்த அதிகாரஅமைப்புக்குள்ள அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்றோ அல்லது எடுக்கப்பட்ட முடிபு எதுவும் பல்கலைக்கழகத்தின் நலனுக்கானது அல்ல என்றோ துணை வேந்தர் கருதுவாராயின் அவர் அத்தகைய முடிபிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதன் முடிபை மறுஆய்வு செய்யுமாறு தொடர்புடைய அதிகாரஅமைப்பைக் கேட்கலாம்; மற்றும் அந்த அதிகாரஅமைப்பு மேற்சொன்ன அறுபது நாட்களுக்குள் அந்த முடிபை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மறுஆய்வு செய்வதற்கு மறுக்குமாயின் அல்லது அதனால் முடிபு எதுவும் எடுக்கப்படவில்லையாயின், அந்தப் பொருட்பாடு மேற்பார்வையீட்டாளருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; அதன் மீது அவருடைய முடிபே அறுதியானதாகும்:

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவின்படி, நேர்வுக்கேற்ப அதிகாரஅமைப்பாலோ அல்லது மேற்பார்வையீட்டாளராலோ அத்தகைய முடிபு எடுக்கப்படும் வரையிலான காலஅளவின்போது தொடர்புடைய அதிகாரஅமைப்பின் முடிபு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும்.

(5) துணை வேந்தர் பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத ஒரு கல்லூரியை அல்லது ஒரு நிறுவனத்தை அதன் கட்டிடங்கள், நூலகங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் கருவியையும் அத்துடன் அந்தக் கல்லூரியால் அல்லது நிறுவனத்தால் நடத்தப்படும் அல்லது நிகழ்த்தப்படும் தேர்வுகள், கற்பித்தல் மற்றும் பிற பணிகளை அவர் பணிக்கலாகும் அத்தகைய நபரால் அல்லது நபர்களால் ஆய்வு ஒன்று செய்யப்படச் செய்வித்து கல்லூரிகளின் அல்லது நிறுவனங்களின் கல்வித் தரம் மற்றும் கல்விக்குரிய நடவடிக்கைகள் தொடர்பான பொருட்பாடு எதனையும் பொறுத்து, அதே போன்ற முறையில் விசாரணையொன்றைச் செய்யப்படச் செய்யலாம்.

(6) துணை வேந்தர் நிலையமைவிதிகளாலோ அல்லது நெறியமைவிதிகளாலோ வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் மற்றும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

The Deans of Schools.

13. Every Dean of the School shall be appointed in such manner and shall exercise such powers and perform such duties, as may be prescribed by the Statutes.

The Registrar.

14. (1) The Registrar shall be appointed in such manner and on such terms and conditions of service, as may be prescribed by the Statutes.

(2) The Registrar shall have the power to enter into agreements, sign documents and authenticate records on behalf of the University.

(3) The Registrar shall exercise such powers and perform such duties, as may be prescribed by the Statutes.

The Finance Officer.

15. The Finance Officer shall be appointed in such manner and on such terms and conditions of service and shall exercise such powers and perform such duties, as may be prescribed by the Statutes.

The Controller of Examinations.

16. The Controller of Examinations shall be appointed in such manner and on such terms and conditions of service and shall exercise such powers and perform such duties, as may be prescribed by the Statutes.

Other officers.

17. The manner of appointment, terms and conditions of services and powers and duties of other officers of the University shall be prescribed by the Statutes.

13. புலமுதன்மையர் ஒவ்வொருவரும் நிலையமை விதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அமர்த்தப்பெறுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும். புலமுதன்மையர்.

14. (1) பதிவாளர், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய பணி வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் அமர்த்தப்பெறுதல் வேண்டும். பதிவாளர்.

(2) பதிவாளர் பல்கலைக்கழகத்தின் சார்பாக உடன்பாடுகள் செய்துகொள்வதற்கும், ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கும் மற்றும் பதிவணங்களுக்கு உறுதிச் சான்றிடுவதற்கும் அதிகாரம் கொண்டிருப்பார்.

(3) பதிவாளர், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

15. நிதி அலுவலர் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய பணி வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் அமர்த்தப்பெறுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும். நிதி அலுவலர்.

16. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய பணி வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் அமர்த்தப்பெறுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும். தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

17. பல்கலைக்கழகத்தின் பிற அலுவலர்களை அமர்த்தும் முறையும், அவர்களுக்கான பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மற்றும் அதிகாரங்களும் கடமைகளும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும். பிற அலுவலர்கள்.

Authorities of University.

18. The following shall be the authorities of the University, namely:—

(*1*) the Court;

(*2*) the Executive Council;

(*3*) the Academic Council;

(*4*) the Board of Affiliation and Recognition;

(*5*) the Boards of Schools;

(*6*) the Finance Committee; and

(*7*) such other authorities as may be declared by the Statutes to be the authorities of the University.

The Court.

19. (1) The constitution of the Court and the term of office of its members shall be prescribed by the Statutes:

Provided that such number of members, as may be prescribed by the Statutes, shall be elected from among the teachers, employees and students of the University.

(2) Subject to the provisions of this Act, the Court shall have the following powers and functions, namely:—

(a) to review, from time to time, the broad policies and programmes of the University and to suggest measures for the improvement and development of the University;

(b) to consider and pass resolutions on the annual report and the annual accounts of the University and the audit report on such accounts;

18. வருவன, பல்கலைக்கழக அதிகார அமைப்புகளாகும், அவையாவன:– பல்கலைக்கழகத்–தின் அதிகார அமைப்புகள்.

(1) அவை;

(2) செயற்குழு;

(3) கல்விக் குழு;

(4) இணைப்பு மற்றும் ஏற்பளிப்புக் குழுமம்;

(5) புலக் குழுமங்கள்;

(6) நிதிக்குழு; மற்றும்

(7) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள் என நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் அத்தகைய பிற அதிகாரஅமைப்புகள்.

19. (1) அவையின் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் பதவிக் காலமும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும்: பல்கலைக்–கழகத்தின் அவை.

**வரம்புரையாக:** நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்கள், பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் ஆகியோரிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, அவை பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:–

(அ) பல்கலைக்கழகத்தின் பரந்த கொள்கைகளையும் செயல்திட்டங்களையும் அவ்வப்போது மறுஆய்வு செய்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான நடவடிக்கைகளுக்கு அறிவுரை வழங்குதல்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் மற்றும் அத்தகைய கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை ஆகியவற்றை ஓர்வு செய்து அவற்றின் மீது தீர்மானங்கள் நிறைவேற்றுதல்;

(c) to advise the Visitor in respect of any matter which may be referred to it for advice; and

(d) to perform such other functions as may be prescribed by the Statutes.

The Executive Council.

20. (1) The Executive Council shall be the principal executive body of the University:

Provided that until the first Executive Council is formed, the Steering Committee of the Ministry of Civil Aviation shall function as an interim Executive Council.

(2) The constitution of the Executive Council, the term of office of its members and its powers and functions shall be prescribed by the Statutes:

Provided that such number of members as may be prescribed by the Statutes shall be from among the elected members of the Court.

The Academic Council.

21. (1) The Academic Council shall be the principal academic body of the University and shall, subject to the provisions of this Act, the Statutes and the Ordinances, have the control and supervision over, and be responsible for, the maintenance of standards of instruction, education and examination within the University and shall exercise such other powers and perform such other duties as may be conferred or imposed upon it as may be prescribed by the Statutes.

(2) The Academic Council shall have the right to advise the Executive Council on all academic matters.

(இ) தேர்வுரைக்காக அதற்குக் குறித்தனுப்பப்படும் பொருட்பாடு எதனையும் பொறுத்து மேற்பார்வையீட்டாளருக்கு தேர்வுரை வழங்குதல்; மற்றும்

(ஈ) நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்–படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதல்.

20. (1) செயற்குழு, பல்கலைக்கழகத்தின் முதன்மைச் செயற்பாட்டுக் குழுமமாக இருக்கும்: செயற்குழு.

**வரம்புரையாக:** முதல் செயற்குழு அமைக்கப்படும் வரையில், குடியியல் வானூர்திப் போக்குவரத்து அமைச்சகத்தின் வழிப்படுத்தும் குழுவானது, இடைக்காலச் செயற்குழுவாகச் செயற்படும்.

(2) செயற்குழுவின் அமைப்பும், அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும் அதன் அதிகாரங்களும் செயற்பணிகளும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்கள், பல்கலைக்கழக அவையின் தெரிந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களிடையேயிருந்து இருத்தல் வேண்டும்.

21. (1) கல்விக் குழு, பல்கலைக்கழகத்தின் முதன்மைக் கல்விக் குழுமமாக இருத்தல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும், நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளுக்கும் உட்பட்டு, பல்கலைக்–கழகத்திற்குள் கற்பித்தல், கல்வி மற்றும் தேர்வு ஆகியவற்றின் மீது கட்டாள்கையும் கண்காணிப்பும் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அவற்றின் தரநிலைகளைப் பேணிவரப்படுதலுக்கும் பொறுப்பாதல் வேண்டும்; மற்றும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு அதற்கு அளிக்கப்படலாகும் அல்லது அதன் மீது விதிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும். கல்விக் குழு.

(2) கல்விக் குழு அனைத்துக் கல்விப் பொருட்பாடுகளிலும் செயற்குழுவிற்குத் தேர்வுரை வழங்குவதற்கு உரிமை உடையது ஆகும்.

(3) The constitution of the Academic Council and the term of office of its members shall be such as may be prescribed by the Statutes.

The Board of Affiliation and Recognition.

22. (1) The Board of Affiliation and Recognition shall be responsible for admitting Colleges and Institutions to the privileges of the University.

(2) The constitution of the Board of Affiliation and Recognition, the term of office of its members and its powers and duties shall be such as may be prescribed by the Statutes.

The Boards of Schools.

23. (1) There shall be such number of Boards of Schools as the University may determine from time to time.

(2) The constitution, powers and functions of the Boards of Schools shall be such as may be prescribed by the Statutes.

The Finance Committee.

24. The constitution, powers and functions of the Finance Committee shall be prescribed by the Statutes.

Other authorities of University.

25. The constitution, powers and functions of other authorities, as may be declared by the Statutes to be the authorities of the University, shall be prescribed by the Statutes.

Power to make Statutes.

26. Subject to the provisions of this Act, the Statutes may provide for all or any of the following matters, namely:—

(a) the constitution, powers and functions of authorities and other bodies of the University, as may be constituted from time to time;

(b) the election and continuance in office of the members of the said authorities and bodies, the filling up of vacancies of members, and all other matters relating to those authorities and other bodies for which it may be necessary or desirable to provide;

(3) கல்விக் குழுவின் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

22. (1) இணைப்பு மற்றும் ஏற்பளிப்புக் குழுமம் கல்லூரிகளையும் நிறுவனங்களையும் பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்பதற்குப் பொறுப்புடையதாகும். இணைப்பு மற்றும் ஏற்பளிப்புக் குழுமம்.

(2) இணைப்பு மற்றும் ஏற்பளிப்புக் குழுமத்தின் அமைப்பும், அதன் உறுப்பினர்களின் பதவிக் காலமும் மற்றும் அதன் அதிகாரங்களும் கடமைகளும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

23. (1) பல்கலைக்கழகம் அவ்வப்போது தீர்மானிக்கலாகிறவாறு அத்தகைய எண்ணிக்கையில் புலக்குழுமங்கள் இருக்கும். புலக்குழுமங்கள்.

(2) புலக்குழுமங்களின் அமைப்பும் அவற்றின் அதிகாரங்களும் செயற்பணிகளும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

24. நிதிக் குழுவின் அமைப்பும் அதன் அதிகாரங்களும் செயற்பணிகளும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும். நிதிக் குழு.

25. பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள் என நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் பிற அதிகாரஅமைப்புகளின் அமைப்பும் அதிகாரங்களும் மற்றும், செயற்பணிகளும், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும். பல்கலைக்கழகத்–தின் பிற அதிகார அமைப்புகள்.

26. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, நிலையமைவிதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம்; அவையாவன:– நிலையமை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(அ) அவ்வப்போது அமைக்கப்படும், பல்கலைக்கழக அதிகாரஅமைப்புகளின் மற்றும் பிற குழுமங்களின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(ஆ) மேற்சொன்ன அதிகாரஅமைப்புகளின் மற்றும் குழுமங்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்கள் பதவியில் தொடர்ந்திருத்தல், அந்த அதிகாரஅமைப்புகள் மற்றும் பிற குழுமங்கள் தொடர்பான உறுப்பினர்களின் காலியிடங்களை நிரப்புதல் மற்றும் எந்தப் பிற பொருட்பாடுகளுக்கு வகை செய்வது தேவையாகுமோ அல்லது விரும்பத்தக்கதாகுமோ அவை அனைத்தும்;

(c) the manner of appointment of the officers of the University, terms and conditions of service, their powers, emoluments and functions that may be exercised and performed by such authority;

(d) the manner of appointment of teachers, academic staff and other employees of the University, their emoluments and other conditions of service:

Provided that the terms and conditions of teachers, academic staff and other employees shall not be varied to their disadvantage;

(e) the manner of appointment of teachers and academic staff working in any other University or organisation for a specific period for undertaking a joint project, their terms and conditions of service and emoluments;

(f) the conditions of service of employees including provisions for pension, insurance and provident fund, the manner of termination of service and disciplinary action;

(g) the principles governing the seniority of service of the employees of the University;

(h) the procedure for arbitration in cases of dispute between employees or students of the University and the University;

(i) the procedure for appeal to the Executive Council by any employee or student against the action of any officer or authority of the University;

(இ) பல்கலைக்கழகத்தின் அலுவலர்களைப் பணி அமர்த்தும் முறை, அத்தகைய அதிகாரிகளுக்கான பணி வரையுறைகளும் வரைக்கட்டுகளும், அவர்களின் அதிகாரங்கள், பணியூதியங்கள் மற்றும் அவர்களால் செயல்படுத்தப்படும் மற்றும் நிறைவேற்றப்படும் செயற்பணிகள் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களையும் கல்விசார் பணியாளர் தொகுதியினரையும் மற்றும் பிற பணியாளர்களையும் பணியமர்த்தும் முறை அவர்களுக்கான பணியூதியங்கள் மற்றும் பிற பணிவரைக்கட்டுகள்:

**வரம்புரையாக:** ஆசிரியர்கள், கல்விசார் பணியாளர் தொகுதியினர் மற்றும் பிற பணியாளர்களுக்கான வரையுரைகளும் வரைக்கட்டுகளும் அவர்களுக்குப் பாதகமான வகையில் மாற்றம் செய்யப்படுதல் ஆகாது.

(உ) ஒரு குறிப்பிட்ட காலஅளவிற்கு ஒரு கூட்டு செயல்திட்டத்தை மேற்கொள்வதற்காக பிற பல்கலைக்கழகத்திலோ அல்லது அமைப்பிலோ பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் பணியாளர் தொகுதியினரின் பணியமர்த்தும் முறை; அவர்களுக்கான பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மற்றும் பணியூதியங்கள்;

(ஊ) ஓய்வூதியம், காப்பீடு மற்றும் வருங்கால வைப்புநிதியம் ஆகியவற்றிற்கான வகையங்கள் உள்ளடங்கலாக பணியாளர்களின் பணி வரைக்கட்டுகள், பணி முடிவுறுத்த முறை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை;

(எ) பல்கலைக்கழகத்தின் பணியாளர்களின் பணிமூப்பை நெறிப்படுத்தும் நெறிகள்;

(ஏ) பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் பல்கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கும் அல்லது மாணவர்களுக்கும் இடையே பூசல் இருக்கும் நேர்வில் பொதுவர் தீர்ப்பிற்கான நடைமுறை;

(ஐ) பல்கலைக்கழகத்தின் அலுவலர் ஒருவரின் அல்லது அதிகாரஅமைப்பு எதனின் நடவடிக்கைக்கு எதிராகப் பணியாளர் அல்லது மாணவர் எவராலும் செயற்குழுவிற்கு மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறை;

(j) the coordination and determination of standards in the University;

(k) the conferment of autonomous status on a College or an Institution or a Department;

(l) the establishment and abolition of schools, Departments, centres, Halls, Colleges and Institutions;

(m) the conferment of honorary degrees;

(n) the withdrawal of degrees, diplomas, certificates and other academic distinctions;

(o) the conditions under which Colleges and Institutions may be admitted to the privileges of the University and the withdrawal of such privileges;

(p) the Institution of fellowships, scholarships, studentships, assistantships, medals and prizes;

(q) the delegation of powers vested in the authorities or officers of the University;

(r) the maintenance of discipline among the employees and students; and

(s) all other matters which by this Act are to be or may be provided for by the Statutes.

Statutes how to be made.

27. (1) The first Statutes of the University shall be framed by the Steering Committee of the Ministry of Civil Aviation and the copy of the same shall be laid as soon as may be, after it is made, before each House of Parliament.

(ஒ) பல்கலைக்கழகத்தின் தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் தீர்மானித்தலும்;

(ஓ) ஒரு கல்லூரிக்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ அல்லது ஒரு துறைக்கோ தன்னாட்சித் தகுநிலை அளித்தல்;

(ஔ) புலம், துறைகள், மையங்கள், கூடங்கள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுதலும் நீக்குதலும்;

(க) மதிப்புறு பட்டங்கள் அளித்தல்;

(ங) பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புச் சீர்மைகளை திரும்பப்பெறுதல்;

(ச) எந்த வரைகட்டுகளின் கீழ் கல்லூரிகள் அல்லது நிறுவனங்கள் பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்படலாகுமோ அல்லது அத்தகைய சிறப்புரிமைகளை திரும்பப்பெறலாகுமோ, அவை;

(ஞ) புத்தாய்வு மாணவர் நிலைகள், படிப்பு உதவித்தொகைகள், மாணவர் உதவித் தொகைகள், துணைமை நிலைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை நிறுவுதல்;

(ட) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகளில் அல்லது அலுவலர்களிடம் உற்றமைந்துள்ள அதிகார ஒப்படைவு;

(ண) பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஒழுங்குக்கட்டுப்பாட்டைப் பேணிவருதல்; மற்றும்

(த) இந்தச் சட்டத்தினால் நிலையமைவிதிகளில் வகைசெய்யப்பட வேண்டிய அல்லது வகை செய்யப்படலாகும் பிற பொருட்பாடுகள் அனைத்தும்.

நிலையமைவிதி–கள் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்.

27. (1) பல்கலைக்கழகத்தின் முதல் நிலையமைவிதிகள் குடியியல் வானூர்திப் போக்குவரத்து அமைச்சகத்தின் வழிப்படுத்தும் குழுவால் வனையப்படுதல் வேண்டும்; மற்றும் அதன் படியொன்று அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

(2) Without prejudice to the provisions contained in sub-section (1), the Executive Council may, from time to time, make new or additional Statutes or may amend or repeal the Statutes in the manner hereafter in this section provided:

Provided that the Executive Council shall not make, amend or repeal any Statutes affecting the status, powers or constitution of any authority of the University until such authority has been given reasonable opportunity of expressing an opinion in writing on the proposed changes, and any opinion so expressed shall be considered by the Executive Council.

(3) Every new Statute or addition to the Statutes or any amendment or repeal of a Statute shall require the assent of the Visitor, who may assent thereto or withhold assent or remit to the Executive Council for reconsideration in the light of the observation, if any, made by him.

(4) A new Statute or a Statute amending or repealing an existing Statute shall have no validity unless it has been assented to by the Visitor.

(5) Notwithstanding anything contained in the foregoing sub-sections, the Visitor may make new or additional Statutes or amend or repeal the Statutes referred to in sub-section (1), during the period of three years immediately after the commencement of this Act:

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகையங்களுக்குக் குந்தகமின்றி, செயற்குழு, அவ்வப்போது இதன்பின்பு இந்தப் பிரிவில் வகைசெய்யப்பட்டுள்ள முறையில் புதிய அல்லது கூடுதல் நிலையமைவிதிகளைச் செய்யலாம் அல்லது நிலையமைவிதிகளைத் திருத்தம் செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்:

**வரம்புரையாக:** உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் மீது அத்தகைய அதிகாரஅமைப்புக்கு எழுத்துவடிவில் கருத்துத் தெரிவிப்பதற்குத் தகுமான வாய்ப்பு நல்கப்படும் வரையில் செயற்குழு, பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு எதனின் தகுநிலை, அதிகாரங்கள் அல்லது அமைப்பைப் பாதிக்கும் வகையில் நிலையமைவிதிகள் எவற்றையும் செய்தல், திருத்தம் செய்தல் அல்லது நீக்கறவு செய்தல் ஆகாது மற்றும் அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்து எதுவும் செயற்குழுவினால் ஓர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு புதிய நிலையமைவிதியும் அல்லது நிலையமைவிதிகளுக்கான சேர்க்கையும் அல்லது ஒரு நிலையமைவிதிக்கான திருத்தம் அல்லது நீக்கறவு எதுவும் மேற்பார்வையீட்டாளரின் இசைவை வேண்டுறுத்துவதாகும், அவர் அதற்கு இசைவளிக்கலாம் அல்லது இசைவினை நிறுத்தி வைக்கலாம் அல்லது அவரால் தெரிவிக்கப்பட்ட குறிப்புரை ஏதேனுமிருப்பின், அதன் அடிப்படையில் மறுஓர்வு செய்வதற்காக செயற்குழுவிற்குத் திருப்பியனுப்பலாம்.

(4) ஒரு புதிய நிலையமைவிதியோ அல்லது நிலவுறும் நிலையமைவிதியொன்றைத் திருத்தம்செய்கிற அல்லது நீக்கறவு செய்கிற ஒரு நிலையமைவிதியோ அது மேற்பார்வையீட்டாளரால் இசைவளிக்கப்பட்டிருந்தாலன்றிச் செல்லுந்தன்மை கொண்டிருத்தல் ஆகாது.

(5) மேலே கண்ட உட்பிரிவுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் மேற்பார்வையீட்டாளர் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு உடன்பின்பு மூன்று ஆண்டுக் காலஅளவின்போது புதிய அல்லது கூடுதல் நிலையமைவிதிகளைச் செய்யலாம் அல்லது (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட நிலையமைவிதிகளைத் திருத்தம் அல்லது நீக்கறவு செய்யலாம்:

Provided that the Visitor may, on the expiry of the said period of three years, make, within one year from the date of such expiry, such detailed Statutes as he may consider necessary and such detailed Statutes shall be laid before both Houses of Parliament.

(6) Notwithstanding anything contained in this section, the Visitor may direct the University to make provisions in the Statutes in respect of any matter specified by him and if the Executive Council is unable to implement such direction within sixty days of its receipt, the Visitor may, after considering the reasons, if any, communicated by the Executive Council for its inability to comply with such direction, make or amend the Statutes suitably.

Power to make Ordinances.

28. (1) Subject to the provisions of this Act and the Statutes, the Ordinances may provide for all or any of the following matters, namely:—

(a) the admission of students to the University and their enrolment as such;

(b) the courses of study to be laid down for all degrees, diplomas and certificates of the University;

(c) the medium of instruction and examination;

(d) the award of degrees, diplomas, certificates and other academic distinctions, the qualifications for the same and the means to be taken relating to the granting and obtaining of the same;

**வரம்புரையாக:** மேற்பார்வையீட்டாளர் மேற்சொன்ன மூன்று ஆண்டுக் காலஅளவு கழிவுறுவதன் பேரில் அத்தகைய கழிவுற்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள், தான் தேவையெனக் கருதலாகும் அத்தகைய விரிவான நிலையமைவிதிகளைச் செய்யலாம்; மற்றும் அத்தகைய விரிவான நிலையமைவிதிகள் நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

(6) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் மேற்பார்வையீட்டாளர், தன்னால் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடு எதனையும் பொறுத்து நிலையமைவிதிகளில் வகையங்கள் செய்யுமாறு பல்கலைக்கழகத்தைப் பணிக்கலாம்; மற்றும் செயற்குழு அதனைப் பெற்றதிலிருந்து அறுபது நாட்களுக்குள் அத்தகைய பணிப்புரைகளைச் செயற்படுத்த இயலாதிருக்குமாயின், மேற்பார்வையீட்டாளர், அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்க அதன் இயலாமைக்குச் செயற்குழுவால் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றை ஓர்வு செய்த பின்பு, நெறியமைவிதிகளைப் பொருத்தமாகச் செய்யலாம் அல்லது திருத்தம் செய்யலாம்.

நெறியமைவிதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

28. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் நிலையமைவிதிகளுக்கும் உட்பட்டு நெறியமைவிதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:–

(அ) மாணவர்களைப் பல்கலைக்கழகத்தில் சேர்த்தலும் அவ்வாறாக அவர்களைப் பதிவு செய்தலும்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பட்டங்களுக்கும், பட்டயங்களுக்கும் மற்றும் சான்றிதழ்களுக்கும் விதிக்கப்படவேண்டிய பாடவகைப் பயிலாறு;

(இ) பயிற்றுவித்தல் மற்றும் தேர்வுக்கான மொழி;

(ஈ) பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் மற்றும் பிற கல்விசார் சிறப்புச் சீர்மைகள் அளித்தல், அதற்கானத் தகுதிப்பாடுகள் மற்றும் அவற்றை அளிப்பது மற்றும் பெறுவது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள்;

(e) the fees to be charged for courses of study in the University and for admission to examinations, degrees and diplomas of the University;

(f) the conditions for award of fellowships, scholarships, studentships, assistantships, medals and prizes;

(g) the conduct of examinations, including the term of office and manner of appointment and the duties of examining bodies, examiners and moderators;

(h) the conditions of residence of the students of the University;

(i) the special arrangements, if any, which may be made for the residence, discipline and teaching of women students and the prescribing of special courses of studies for them;

(j) the appointment and emoluments of employees other than those for whom provision has been made in the Statutes;

(k) the establishment of Centre of Studies, Board of Studies, Special centre, Specialised Laboratories and other Committees;

(l) the manner of co-operation and collaboration with other Universities in India or abroad and authorities including learned bodies or associations;

(m) the creation, composition and functions of any other body which is considered necessary for improving the academic life of the University;

(n) such other terms and conditions of service of teachers and other academic staff as are not prescribed by the Statutes;

(உ) பல்கலைக்கழகத்தில் பாடவகைப் பயிலாறுகளுக்காகவும் பல்கலைக்கழகத்தின் தேர்வுகள், பட்டங்கள் மற்றும் பட்டயங்கள் ஆகியவற்றை அனுமதிப்பதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்;

(ஊ) புத்தாய்வு மாணவர் நிலைகள், படிப்பு உதவித் தொகைகள், மாணவர் உதவித்தொகைகள், துணைமை உதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் அளிப்பதற்கான வரைக்கட்டுகள்;

(எ) தேர்வு நடத்தும் குழுமங்கள், தேர்வாளர்கள் மற்றும் தேர்வுக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் பதவிக்காலம், பணியமர்த்தும் முறை மற்றும் தேர்வு கடமைகள் உள்ளடங்கலாக தேர்வுகளை நடத்துதல்;

(ஏ) பல்கலைக்கழக மாணவர்களின் உறைவிடத்திற்கான வரைக்கட்டுகள்;

(ஐ) மாணவிகளுக்கான உறைவிடம், படிப்புகள் மற்றும் கற்பிப்பிற்காகச் செய்யப்படலாகும் சிறப்பு ஏற்பாடுகள் எவையேனுமிருப்பின், அவை மற்றும் அவர்களுக்கான சிறப்புப் பாடவகைப் பயிலாறுகளை வகுத்துரைத்தல்;

(ஒ) நிலையமைவிதிகளில் வகை செய்யப்பட்டிருப்பவர்கள் அல்லாத பிற பணியாளர்களின் பணிஅமர்த்தம் மற்றும் பணியூதியங்கள்;

(ஓ) கல்வி மையம், கல்விக் குழுமம், சிறப்பு மையம், தனித்துறை ஆய்வுக்கூடங்கள் மற்றும் பிற குழுக்களை நிறுவுதல்;

(ஔ) இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள பிற பல்கலைக்கழகங்களுடனும், கற்றறிந்த குழுமங்கள் அல்லது சங்கங்கள் உள்ளடங்கலான அதிகாரஅமைப்புகளுடனும் கூட்டுறவாகவும், ஒன்றிணைந்தும் செயல்படும் முறை;

(க) பல்கலைக்கழகத்தின் கல்விசார் உயிர்ப்பு நிலையை மேம்படுத்துவதற்காகத் தேவையெனக் கருதப்படும் பிற குழுமம் எதனின் உருவாக்கம், கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள்;

(ங) நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படாத, ஆசிரியர்கள் மற்றும் பிற கல்விசார் பணியாளர் தொகுதியினருக்கான அத்தகைய பிற பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

(o) the supervision and management of Colleges and Institutions admitted to the privileges of the University;

(p) the setting up of a machinery for redressal of grievances of employees; and

(q) all other matters which by this Act or the Statutes may be provided for by the Ordinances.

(2) The first Ordinances shall be made by the Vice-Chancellor with the previous approval of the Central Government and the Ordinances so made may be amended, repealed or added to at any time by the Executive Council in the manner prescribed by the Statutes.

Regulations.

29. The authorities of the University may make Regulations, consistent with this Act, the Statutes and the Ordinances in the manner prescribed by the Statutes, for the conduct of their own business and that of the Committees, if any, appointed by them and not provided for by this Act, the Statutes or the Ordinances.

Annual report.

30. (1) The annual report of the University shall be prepared under the direction of the Executive Council, which shall include, among other matters, the steps taken by the University towards the fulfilment of its objects and shall be submitted to the Court on or after such date as may be prescribed by the Statutes and the Court shall consider the report in its annual meeting.

(2) The Court shall submit the annual report to the Visitor along with its comments, if any.

(ச) பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்பட்ட கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களைக் கண்காணித்தல் மற்றும் நிருவகித்தல்;

(ஞ) பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான இயங்குமுறை ஒன்றை அமைத்தல்; மற்றும்

(ட) இந்தச் சட்டத்தாலோ நிலையமை விதிகளாலோ நெறியமைவிதிகளில் வகை செய்யப்படலாகும் பிற பொருட்பாடுகள் அனைத்தும்.

(2) முதல் நெறியமைவிதிகள், துணை வேந்தரால் மைய அரசின் முன்ஒப்பேற்புடன் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு செய்யப்படும் நெறியமைவிதிகள், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் செயற்குழுவினால் எந்தச் சமயத்திலும் திருத்தம் செய்யப்படலாம், நீக்கறவு செய்யப்படலாம் அல்லது அதனுடன் சேர்க்கப்படலாம்.

ஒழுங்குறுத்தும் விதிகள்.

29. பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள், தம் சொந்த அலுவலையும் அவற்றால் அமர்த்தப்பட்ட குழுக்கள் எவையேனுமிருப்பின், அந்தக் குழுக்களின் அலுவலையும் நடத்துவதற்காக, இந்தச் சட்டத்தாலோ, நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளாலோ வகையங்கள் செய்யப்படாதவிடத்து, நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில், இந்தச் சட்டத்திற்கும், நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளுக்கும் ஒவ்வுதலாகவுள்ள ஒழுங்குறுத்தும்விதிகளைச் செய்யலாம்.

ஆண்டறிக்கை.

30. (1) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை செயற்குழுவின் பணிப்புரையின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்; அது பிற பொருட்பாடுகளுக்கிடையே, பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு அதனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்; மற்றும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தேதியன்றோ அதற்குப் பின்போ அவைக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் அவை, அந்த அறிக்கையை அதன் ஆண்டுக் கூட்டத்தில் ஓர்வு செய்தல் வேண்டும்.

(2) அவை, ஆண்டறிக்கையை அதன் விளக்கவுரை ஏதேனுமிருப்பின், அதனுடன் சேர்த்து மேற்பார்வையீட்டாளருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(3) A copy of the annual report, as prepared under sub-section (1), shall also be submitted to the Central Government, which shall, as soon as may be, cause the same to be laid before both Houses of Parliament.

(4) A copy of the annual report shall also be exhibited on the website of the University after having been laid in both Houses of Parliament.

Annual accounts.

31. (1) The annual accounts and balance-sheet of the University shall be prepared under the directions of the Executive Council and shall, once at least every year and at intervals of not more than fifteen months, be audited by the Comptroller and Auditor-General of India or by such persons as he may authorise in this behalf.

(2) A copy of the annual accounts together with the audit report thereon shall be submitted to the Court along with the observations if any, of the Executive Council and the Court will submit the same to the Visitor along with its observation.

(3) Any observation made by the Visitor on the annual accounts shall be brought to the notice of the Court and the observations of the Court, if any, shall, after being considered by the Executive Council, be submitted to the Visitor.

(4) A copy of the annual accounts together with the audit report, as submitted to the Visitor, shall also be submitted to the Central Government, which shall, as soon as may be, cause the same to be laid before both Houses of Parliament.

(5) The audited annual accounts after having been laid before both Houses of Parliament shall be published in the Gazette of India.

(3). (1)ஆம் உட்பிரிவின்படி தயாரிக்கப்பட்டவாறான ஆண்டறிக்கையின் படியொன்று மைய அரசுக்கும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; அது, அதனைக் கூடிய விரைவில் நாடாளுமன்றத்தின் ஈரவையின் முன்பும் வைக்கப்படச் செய்தல் வேண்டும்.

(4) ஆண்டறிக்கையின் படியொன்று நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்கப்பட்ட பின்பு பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்திலும் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

31. (1) பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளும் ஐந்தொகைக் குறிப்பும் செயற்குழுவின் பணிப்புரைகளின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது பதினைந்து மாதங்களுக்கு மேற்படாத கால இடைவெளிகளில் ஒருமுறையேனும் இந்தியக் கணக்காய்வர் மற்றும் தலைமைத் தணிக்கையராலோ அல்லது அவர் இதற்கென அதிகாரமளிக்கலாகிற அத்தகைய நபர்களாலோ தணிக்கை செய்யப்படுதல் வேண்டும். ஆண்டுக் கணக்குகள்.

(2) ஆண்டுக் கணக்குகளின் படியொன்று அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து செயற்குழுவின் குறிப்புரைகள் எவையேனுமிருப்பின் அவற்றையும் சேர்த்து, அவைக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அவை, அதனை அதன் குறிப்புரைகளுடன் சேர்த்து மேற்பார்வையீட்டாளருக்குப் பணிந்தனுப்பும்.

(3) ஆண்டுக் கணக்குகள் மீது மேற்பார்வையீட்டாளரால் தெரிவிக்கப்பட்ட குறிப்புரை எதுவும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்; மற்றும் அவையின் குறிப்புரைகள், எவையேனுமிருப்பின், அவை செயற்குழுவால் ஓர்வு செய்யப்பட்ட பின்பு மேற்பார்வையீட்டாளருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) மேற்பார்வையீட்டாளருக்குப் பணிந்தனுப்பப்பட்டது போன்று ஆண்டுக் கணக்குகளின் படியொன்று தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, மைய அரசுக்கும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; அது, அதனை கூடிய விரைவில் நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்கப்படச் செய்தல் வேண்டும்.

(5) தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்கப்பட்ட பின்பு இந்திய அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

Returns and information.

32. The University shall furnish to the Central Government such returns or other information with respect to its property or activities as the Central Government may, from time to time, require, within such period as may be specified by the Central Government.

Conditions of service of employees.

33. (1) The University shall enter into written contract of service with every employee of the University appointed on regular basis or otherwise and the terms and conditions of the contract shall not be inconsistent with the provisions of this Act, the Statutes and the Ordinances.

(2) A copy of the contract referred to in sub-section (1) shall be kept with the University and a copy thereof shall also be furnished to the employee concerned.

Tribunal of Arbitration.

34. (1) Any dispute arising out of the contract between the University and any employee shall, at the request of the employee, be referred to a Tribunal of Arbitration consisting of one member appointed by the Executive Council, one member nominated by the employee concerned and an umpire appointed by the Visitor.

(2) The decision of the Tribunal of Arbitration shall be final and binding on the parties and no suit shall lie in any civil court in respect of the matters decided by the Tribunal:

Provided that nothing in this sub-section shall preclude the employee from availing of the judicial remedies available under articles 32 and 226 of the Constitution.

32. பல்கலைக்கழகம், மைய அரசு அவ்வப்போது வேண்டுறுத்துகிறவாறு, மைய அரசால் குறித்திடப்படலாகும் அத்தகைய காலஅளவிற்குள் அதன் சொத்து அல்லது செயற்பாடுகள் பொறுத்து அத்தகைய விவர அறிக்கைகளை அல்லது பிற தகவல்களை மைய அரசுக்கு அளித்தல் வேண்டும். விவர அறிக்கைகளும் தகவல்களும்.

33. (1) பல்கலைக்கழகம், நிரந்தர அடிப்படையிலோ பிறவாறாகவோ பணியமர்த்தப்பெற்றுள்ள பல்கலைக் கழகத்தின் ஒவ்வொரு பணியாளருடனும் எழுத்து வடிவிலான பணிஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்; மற்றும் ஒப்பந்தத்தின் வரையுரைகளும் வரைக்கட்டுகளும் இந்தச் சட்டம், நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளின் வகையங்களுக்கு முரணாக இருத்தல் ஆகாது. பணியாளருக்கான பணிவரைக்–கட்டுகள்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட ஒப்பந்தத்தின் படியொன்று பல்கலைக்கழகத்திடம் வைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன் படியொன்று தொடர்புடைய பணியாளருக்கும் அளிக்கப்படுதல் வேண்டும்.

34. (1) பல்கலைக்கழகத்திற்கும் பணியாளர் எவருக்கும் இடையிலான ஒப்பந்தத்திலிருந்து எழும் பூசல் எதுவும் பணியாளரின் வேண்டுகோளுக்கு ஏற்ப செயற்குழுவால் அமர்த்தப்பெற்ற ஓர் உறுப்பினரையும் மற்றும் தொடர்புடைய பணியாளரால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரையும் மற்றும் மேற்பார்வையீட்டாளரால் அமர்த்தப்பெற்ற ஒரு நடுவரையும் உள்ளடக்கிய ஒரு பொதுவர் தீர்ப்பாயத்திற்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். பொதுவர் தீர்ப்பாயம்.

(2) பொதுவர் தீர்ப்பாயத்தின் முடிபே அறுதியானதாகவும் தரப்பினர்களைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்; மற்றும் தீர்ப்பாயத்தால் முடிபு செய்யப்பட்ட பொருட்பாடுகள் பொறுத்து எந்த ஓர் உரிமையியல் நீதிமன்றத்திலும் உரிமை வழக்கு எதுவும் தொடுப்பதற்கு உற்றது ஆகாது:

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவில் உள்ள எதுவும் இந்திய அரசமைப்பின் 32 மற்றும் 226 ஆகிய உறுப்புகளின்படி கிடைக்கக்கூடிய நீதிமுறைத் தீர்வழிகளைப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து பணியாளரை தடுத்தல் ஆகாது.

(3) Every request made by the employee under sub-section (1), shall be deemed to be a submission to arbitration upon the terms of this section within the meaning of the Arbitration and Conciliation Act, 1996. 26 /1996.

(4) The procedure for regulating the work of the Tribunal shall be prescribed by the Statutes.

Procedure of appeal and arbitration in disciplinary cases against students.

35. (1) Any student or candidate for an examination whose name has been removed from the rolls of the University by the orders or resolution of the Vice-Chancellor, Disciplinary Committee or Examination Committee, as the case may be, and who has been debarred from appearing at the examinations of the University for more than one year, may, within ten days of the date of receipt of such orders or copy of such resolution by him, appeal to the Executive Council and the Executive Council may confirm, modify or reverse the decision of the Vice-Chancellor or the Committee, as the case may be.

(2) Any dispute arising out of any disciplinary action taken by the University against a student shall, at the request of such student, be referred to a Tribunal of Arbitration and the provisions of section 36 shall, as far as may be, apply to a reference made under this sub-section.

Right to appeal.

36. Every employee or student of the University, notwithstanding anything contained in this Act, have a right to appeal within such time as may be prescribed by the Statutes, to the Executive Council against the decision of any officer or authority of the University or of the Principal of any College or Institution, as the case may be,

(3). (1) ஆம் உட்பிரிவின்படி பணியாளரால் செய்யப்படும் ஒவ்வொரு வேண்டுகோளும், பொதுவர்தீர்ப்பு மற்றும் இசைவுத்தீர்வுச் சட்டம், 1996 இன் பொருளின்படி இந்தப் பிரிவின் கருத்திற்கிணங்க பொதுவர்தீர்ப்பிற்கான ஒரு பணிந்தனுப்புகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும். 26/1996.

(4) தீர்ப்பாயத்தின் பணியை ஒழுங்குறுத்துவதற்கான நடைமுறையானது நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும்.

மாணவர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் மேல்முறையீடு மற்றும் பொதுவர்த் தீர்ப்பிற்கான நடைமுறைகள்.

35. (1) நேர்வுக்கேற்ப துணை வேந்தர், ஒழுங்குநடவடிக்கைக் குழு அல்லது தேர்வுக் குழுவின் ஆணையினாலோ அல்லது தீர்மானத்தினாலோ மாணவர் அல்லது தேர்வுக்கான தேர்வுநாடுபவர் எவருடைய பெயர் பல்கலைக்கழகத்தின் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்து அவர் ஓர் ஆண்டுக்கு மேல் பல்கலைக்கழகத்தின் தேர்வுகளை எழுதுவதிலிருந்துத் தடை செய்யப்பட்டிருக்கிறாரோ அவரால் அத்தகைய ஆணைகள் அல்லது அத்தகைய தீர்மானத்தின் படியைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செயற்குழுவிற்கு மேல்முறையீடு செய்யலாம்; மற்றும் செயற்குழு நேர்வுக்கேற்ப துணை வேந்தரின் அல்லது குழுவின் முடிபை உறுதி செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(2) ஒரு மாணவருக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட ஒழுங்குநடவடிக்கை எதிலுமிருந்தும் எழும் பூசல் எதுவும், அத்தகைய மாணவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, பொதுவர் தீர்ப்பாயம் ஒன்றுக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் 36 ஆம் பிரிவின் வகையங்கள் கூடுமானவரையில், இந்த உட்பிரிவின்படியான ஒரு குறித்தனுப்புகைக்கும் பொருந்துதல் வேண்டும்.

மேல்முறை-யீட்டுக்கான உரிமை.

36. பல்கலைக்கழகத்தின் பணியாளர் அல்லது மாணவர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவிற்குள், நேர்வுக்கேற்ப பல்கலைக்கழகத்தின் அலுவலர் எவரின் அல்லது அதிகாரஅமைப்பு எதனின் அல்லது கல்லூரி அல்லது நிறுவனம் எதனின் முதல்வரின் முடிபுக்கு எதிராக செயற்குழுவிடம் மேல்முறையீடு செய்து கொள்வதற்கு ஓர் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்

and thereupon the Executive Council may confirm, modify or reverse the decision appealed against.

Provident and pension fund.

37. (1) The University shall constitute for the benefit of its employees such provident or pension fund or provide such insurance schemes as it may deem fit in such manner and subject to such conditions as may be prescribed by the Statutes.

(2) Where such provident fund or pension fund has been so constituted, the Central Government may declare that the provision of the Provident Funds Act, 1925 (shall apply to such fund, as if it were a Government provident fund. 19 / 1925.

Disputes as to constitution of University authorities and bodies.

38. If any question arises as to whether any person has been duly elected or appointed as, or is entitled to be, a member of any authority or other body of the University, the matter shall be referred to the Visitor whose decision thereon shall be final.

Constitution of Committees.

39. Where any authority of the University is given power by this Act or the Statutes to appoint Committees, such Committees shall, save as otherwise provided, consist of the members of the authority concerned and of such other person, if any, as the authority in each case may think fit.

மற்றும் அதன் பேரில் செயற்குழு, எந்த முடிபிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த முடிபினை உறுதி செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

வருங்கால வைப்பு மற்றும் ஓய்வூதிய நிதியம்.

37. (1) பல்கலைக்கழகம் அதன் பணியாளர்களின் நலப்பயனுக்காக நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் அது பொருத்தமெனக் கொள்கிறவாறு அத்தகைய வருங்கால வைப்பு அல்லது ஓய்வூதிய நிதியத்தை அமைத்தலோ அல்லது அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களுக்கு வகைசெய்தலோ வேண்டும்.

(2) மைய அரசு, அத்தகைய வருங்கால வைப்பு நிதியம் அல்லது ஓய்வூதிய நிதியம் அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறவிடத்து, அது ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியமாக இருந்தாற்போன்று, வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டம், 1925 இன் வகையம் அத்தகைய நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என்று விளம்பலாம்.

19 / 1925.

பல்கலைக்கழகத் – தின் அதிகாரஅமைப்பு– கள் மற்றும் குழுமங்கள் ஆகியவற்றின் அமைப்பு குறித்த பூசல்கள்.

38. எந்த ஒரு நபரும் பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு அல்லது பிற குழுமம் எதனின் ஓர் உறுப்பினராக முறையாகத் தெரிந்தெடுக்கப்பெற்றோ அல்லது அமர்த்தப்பெற்றோ இருக்கிறாரா அல்லது அவ்வாறாக இருப்பதற்கு உரிமை கொண்டிருக்கிறாரா என்பது குறித்துப் பிரச்சினை எதுவும் எழுமாயின், அந்தப் பொருட்பாடு மேற்பார்வையீட்டாளருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும், அதன்மீது அவருடைய முடிபே அறுதியானதாகும்.

குழுக்களின் அமைப்பாக்கம்.

39. இந்தச் சட்டத்தாலோ அல்லது நிலையமைவிதிகளாலோ பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு எதுவும் குழுக்களை அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறவிடத்து, அத்தகைய குழுக்கள் பிறவாறாக வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, தொடர்புடைய அதிகாரஅமைப்புகளின் உறுப்பினர்களையும் அதிகாரஅமைப்பு ஒவ்வொரு நேர்விலும் பொருத்தமெனக் கருதுகிறவாறு பிற நபர் எவரேனுமிருப்பின், அத்தகைய பிற நபரையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

Filling of casual vacancies.

40. All the casual vacancies among the members (other than *ex officio* members) of any authority or other body of the University shall be filled, as soon as may be convenient, by the person or body who appointed, elected or co-opted the members whose place has become vacant and the person appointed, elected or co-opted to a casual vacancy shall be a member of such authority or body for the residue of the term for which the person of whose place he fills would have been a member.

Proceedings of University authorities or bodies not invalidated by vacancies.

41. No act or proceedings of any authority or other body of the University shall be invalid merely by reason of the existence of a vacancy or vacancies among its members.

Protection of action taken in good faith.

42. No suit or other legal proceedings shall lie against any officer or other employee of the University for anything which is in good faith done or intended to be done in pursuance of any of the provisions of this Act, the Statutes or the Ordinances.

Mode of proof of University record.

43. A copy of any receipt, application, notice, order, proceedings resolution of any authority or Committee of the University, or other documents in possession of the University, or any entry in any register duly maintained by the University, if certified by the Registrar, shall be received as *prima facie* evidence of such receipt, application, notice, order, proceeding, resolution or documents

40. பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு அல்லது பிற குழுமம் எதனின் (பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத பிற) உறுப்பினர்களுக்கிடையிலான அனைத்துத் தற்காலிகக் காலியிடங்களும், பொருந்துமாறு கூடிய விரைவில், எந்த உறுப்பினரின் இடம் காலியாயிருக்கிறதோ அந்த உறுப்பினர்களை அமர்த்திய, தெரிந்தெடுத்த அல்லது ஒத்துத்தேர்ந்தெடுத்த நபராலோ அல்லது குழுமத்தாலோ நிரப்பப்படுதல் வேண்டும்;மற்றும் ஒரு தற்காலிகக் காலியிடத்திற்கு அமர்த்தப்பெற்ற, தெரிந்தெடுக்கப்பெற்ற அல்லது ஒத்துத்தேர்ந்தெடுக்கப்பெற்ற நபர் எந்த நபருடைய இடத்தை அவர் நிரப்புகிறாரோ அந்த நபர் ஓர் உறுப்பினராக இருந்திருக்கக் கூடிய எஞ்சிய காலத்திற்கு அத்தகைய அதிகாரஅமைப்பின் அல்லது குழுமத்தின் ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

தற்காலிகக் காலியிடங்களை நிரப்புதல்.

41. பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு அல்லது பிற குழுமம் எதனின் செயல் அல்லது நடவடிக்கைகள் எவையும் அதன் உறுப்பினர்களிடையே காலியிடம் அல்லது காலியிடங்கள் இருப்பதன் காரணத்தால் மட்டுமே செல்லாநிலையது ஆகாது.

காலியிடங்கள் இருப்பது பல்கலைக்கழக அதிகார–அமைப்புகளின் அல்லது குழுக்களின் நடவடிக்கைகளை செல்லாநிலையது ஆக்காது.

42. இந்தச் சட்டத்தின், நிலையமைவிதிகளின் அல்லது நெறியமைவிதிகளின் வகையங்களை ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் பல்கலைக்கழகத்தின் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ பிற சட்ட நடவடிக்கைகளோ தொடர்வது உற்றது ஆகாது.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

43. பல்கலைக்கழகத்தின் உடைமையில் இருக்கும் பற்றுச்சீட்டு, விண்ணப்பம், அறிவிப்பு, ஆணை, நடவடிக்கைகள், பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு அல்லது குழு எதனின் தீர்மானம் அல்லது பிற ஆவணங்கள் எவற்றின் படியொன்று அல்லது பல்கலைக்கழகத்தால் முறையாகப் பேணிவரப்படும் பதிவேடு எதிலுமுள்ள பதிவு எதுவும், பதிவாளரால் உறுதிச்சான்றிடப்படுமானால் அத்தகைய பற்றுச்சீட்டு, விண்ணப்பம், அறிவிப்பு, ஆணை, நடவடிக்கை, தீர்மானம் அல்லது ஆவணங்களுக்கான

பல்கலைக்–கழகத்தின் பதிவணத்தை மெய்ப்பிக்கும் முறை.

or the existence of entry in the register and shall be admitted as evidence of the matters and transactions therein where the original thereof would, if produced, have been admissible in evidence, notwithstanding anything contained in the Indian Evidence Act, 1872 or in any other law for the time being in force. 1/1872.

Power of remove difficulties.

44. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions, not inconsistent with the provisions of this Act, as appear to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no such order shall be made under this section after the expiry of three years from the commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

Statutes, Ordinances and Regulations to be published in the Official Gazette and to be laid before Parliament.

45. (1) Every Statute, Ordinance or Regulation made under this Act shall be published in the Official Gazette and hosted on the website of the University.

அல்லது பதிவேட்டில் உள்ள பதிவு இருப்பதற்கான முதல் நோக்குச் சான்றாகப் பெறப்படுதல் வேண்டும்; மற்றும்

1/1872. இந்தியச் சான்றுச் சட்டம், 1872 இலோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலுமோ அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அவற்றின் மூல ஆவணங்கள், முன்னிடப்படுமானால் எவ்வாறு சான்றில் ஏற்கத்தக்கதாக இருக்குமோ அவ்வாறே அதிலுள்ள பொருட்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் சான்றாக ஏற்கப்படுதல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

44. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் வழி இடர்ப்பாட்டை அகற்றுவதற்காக அதற்குத் தேவையென அல்லது உகந்ததெனத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரண்படாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையிலிருந்து மூன்றாண்டு கழிவுற்ற பின்பு இந்தப் பிரிவின்படி அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

நிலையமைவிதிகளும்,நெறியமைவிதிகளும் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளும், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதலும் மற்றும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படுதலும் வேண்டும்.

45. (1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது ஒழுங்குறுத்தும்விதி ஒவ்வொன்றும் அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் பல்கலைக்கழக வலைதளத்தில் தொகுத்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) Every Statute, Ordinance or Regulation made under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the Statute, Ordinance or Regulation or both Houses agree that the Statute, Ordinance or Regulation should not be made, the Statute, Ordinance or Regulation shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that Statute, Ordinance or Regulation.

(3) The power to make Statutes, Ordinances or Regulations shall include the power to give retrospective effect from a date not earlier than the date of commencement of this Act, to the Statutes, Ordinances or Regulations or any of them but no retrospective effect shall be given to any Statute, Ordinance or Regulation so as to prejudicially affect the interests of any person to whom such Statute, Ordinance or Regulation may be applicable.

Transitional provisions.

46. Notwithstanding anything contained in this Act and the Statutes,—

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது ஒழுங்குறுத்தும்விதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்தக் காலஅளவுக்கு ஒரு கூட்டத் தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த நிலையமைவிதியில் அல்லது நெறியமைவிதியில் அல்லது ஒழுங்குறுத்தும்விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது ஒழுங்குறுத்தும்விதி செய்யப்படுதல் ஆகாது என இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அதன்பின்பு அந்த நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது ஒழுங்குறுத்தும்விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது நேர்வுக்கேற்ப செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது ஒழுங்குறுத்தும் விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(3) நிலையமைவிதிகள், நெறியமைவிதிகள் அல்லது ஒழுங்குறுத்தும்விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் நிலையமைவிதிகள், நெறியமைவிதிகள் அல்லது ஒழுங்குறுத்தும்விதிகளுக்கு அல்லது அவற்றில் எதற்கும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னராக அல்லாத ஒரு தேதியிலிருந்து முன்மேவு செல்திறம் கொடுப்பதற்கான அதிகாரத்தை உள்ளடக்குவதாகும்; ஆனால், அத்தகைய நிலையமைவிதிகள், நெறியமைவிதிகள் அல்லது ஒழுங்குறுத்தும்விதிகள் எந்த நபருக்குப் பொருந்துவனதாகுமோ அந்த நபர் எவரின் நலன்களைக் குந்தகமாகப் பாதிக்கும் வகையில் நிலையமைவிதிகள், நெறியமைவிதிகள் அல்லது ஒழுங்குறுத்தும்விதிகள் எவற்றிற்கும் முன்மேவு செல்திறம் கொடுக்கப்படுதல் ஆகாது.

மாறும் இடைக்காலத்–திற்கான வகையங்கள்.

46. இந்தச் சட்டத்திலும் நிலையமைதிகளிலும் அடங்கிய எது எவ்வாறிருப்பினும்,–

(a) the first Chancellor and the first Vice-Chancellor shall be appointed by the Visitor in such manner and on such conditions as may be deemed fit and each of the said officers shall hold office for such term, not exceeding five years, as may be specified by the Visitor;

(b) the first Registrar and the first Finance Officer shall be appointed by the Visitor on the recommendation of the Vice-Chancellor and each of the said officers shall hold office for a term of three years;

(c) the first Court and the first Executive Council shall consist of not more than ten members and ten members, respectively, who shall be nominated by the Visitor and shall hold office for a term of three years;

(d) the first Academic Council shall consist of not more members than Executive Council and they shall hold office for a term of three years:

Provided that any vacancy occurs in the above offices or authorities, the same shall be filled by appointment or nomination, as the case may be, by the Visitor, and the person so appointed or nominated shall hold office for so long as the officer or member in whose place he is appointed or nominated would have held that office, if such vacancy have not occurred.

(அ) முதல் வேந்தரும் முதல் துணை வேந்தரும் மேற்பார்வையீட்டாளரால், பொருத்தமெனக் கொள்ளலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய வரைக்கட்டுகளின் பேரிலும் அமர்த்தப்பெறுவர்; மற்றும் மேற்சொன்ன அலுவலர்கள் ஒவ்வொருவரும் மேற்பார்வையீட்டாளரால் குறித்துரைக்கப்படலாகிறவாறு, ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத அத்தகைய காலஅளவிற்குப் பதவி வகிப்பர்;

(ஆ) முதல் பதிவாளரும், முதல் நிதி அலுவலரும் துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் மேற்பார்வை யீட்டாளரால் அமர்த்தப்பெறுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன அலுவலர்களில் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(இ) முதல் அவையும் முதல் செயற்குழுவும் முறையே பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாதோரையும் மற்றும் பத்து உறுப்பினர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவர்கள் மேற்பார்வையீட்டாளரால் நியமிக்கப்பெறுதல் வேண்டும் மற்றும் மூன்று ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(ஈ) முதல் கல்விக் குழு, செயற்குழுவின் உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்; மற்றும் அவர்கள் மூன்று ஆண்டுக் காலஅளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** மேற்சொன்ன அலுவலகங்களில் அல்லது அதிகாரஅமைப்புகளில் ஏற்படும் காலியிடம் எதுவும் அது மேற்பார்வையீட்டாளரால், நேர்வுக்கேற்ப, பதவியமர்த்தம் மூலமாகவோ அல்லது நியமனம் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு அமர்த்தப்பெற்ற அல்லது நியமிக்கப்பெற்ற நபர் அவர், எந்த அலுவலரின் அல்லது உறுப்பினரின் இடத்தில் அமர்த்தப் பெறுகிறாரோ அல்லது நியமிக்கப் பெறுகிறாரோ அந்த அலுவலர் அல்லது உறுப்பினர் அத்தகைய காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் எதுவரையில் அந்தப் பதவியை வகித்திருக்கக் கூடுமோ அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

Completion of courses of studies in Colleges or Institutions affiliated to University.

47. Notwithstanding anything contained in this Act, or in the Statutes or the Ordinances, any student of a College or an Institution, who, immediately before the admission of such College or Institution to the privileges of the University, was studying for a degree, diploma or certificate of any University constituted under any Act, shall be permitted by the University, to complete his course for that degree, diploma or certificate, as the case may be, and the University shall provide for the instructions and examination of such student in accordance with the syllabus of studies of such College or Institution or University, as the case may be.

Role of Central Government.

48. (1) The University shall, in discharge of its functions under this Act, be bound by such directions on questions of policy as the Central Government may give in writing to it from time to time.

(2) The decision of the Central Government as to whether a question is one of policy or not shall be final.

47. இந்தச் சட்டத்தில் நிலையமைவிதிகள் அல்லது நெறியமைவிதிகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் ஒரு கல்லூரி அல்லது ஒரு நிறுவனத்தின் மாணவர் எவரும் அத்தகைய கல்லூரி அல்லது நிறுவனம் பல்கலைக்கழகத்தின் சிறப்புரிமை நலன்கருதி ஏற்கப்படுவதற்கு உடன்முன்பு எந்த ஒரு சட்டத்தின்படியும் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் பட்டம், பட்டயம் அல்லது சான்றிதழ் ஒன்றுக்காகப் படித்து வந்திருப்பின் நேர்வுக்கேற்ப அந்தப் பட்டம், பட்டயம் அல்லது சான்றிதழுக்கானத் தன் பயிலாறினை நிறைவு செய்வதற்குப் பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பல்கலைக்கழகம் நேர்வுக்கேற்ப, அத்தகைய கல்லூரி, நிறுவனம் அல்லது பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களின்படி அத்தகைய மாணவருக்குக் கல்வி கற்பித்தலுக்கும் தேர்வு நடத்துவதற்கும் வகை செய்தல் வேண்டும்.

பல்கலைக்–கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் அல்லது நிறுவனங்களில் பாடவகைப் பயிலாறுகளை நிறைவு செய்தல்.

48. (1) இந்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழகம் அதன் செயற்பணிகளை ஆற்றுகையில் மைய அரசு அவ்வப்போது எழுத்து வடிவில் கொடுக்கலாகிற கொள்கை பற்றிய பிரச்சினைகள் மீதான அத்தகைய பணிப்புரைகளுக்குக் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

மைய அரசின் பங்கு.

(2) பிரச்சினையொன்று கொள்கை பற்றியதா இல்லையா என்பது குறித்து மைய அரசின் முடிபே அறுதியானதாகும்.